விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

UNION
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
(C-9281)
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 12 திங்கட்கிழமை (24.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 67

### ஐ.நா தீர்மானத்திலிருந்து வெளியேறுவதால்
## வெளிநாடுகளுடன் இணைந்து செயலாற்றுவதில் பிரச்சினைகள் எழாது
### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா தீர்மானத்தில் இருந்து வெளியேறுவதால் வெளிநாடுகளுடன் இணைந்து செயலாற்றுவதில் பிரச்சினைகள் எழாது என ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட ஆலோசகரும் தவிசாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரி 23

## ஐ.நா கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது


(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 43ஆவது கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத் தொடரில் எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கை தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது. (ம)

# ஓமந்தையில் பஸ் - கார் விபத்து நால்வர் பலி; 20 பேர் படுகாயம்

## பஸ் தீயிட்டு எரிப்பு; பொலிஸ், எஸ்.ரி.எவ் குவிப்பு



*(வவுனியா)* வவுனியா ஓமந்தையில் பேருந்து - கார் மோதிக் கொண்ட விபத்தில் நால்வர் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர். சம்பவத்தையடுத்து இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்றநிலையை கட்டுப்படுத்த பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். *(23ஆம் பக்கம் பார்க்க)*



## மாகாண சபை தேர்தலை நடத்த
### அமைச்சரவைக்கு சட்டமூலம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை எமக்கில்லாதபடியாலே இடைக்கால கணக்கறிக்கையை அங்கீகரித்துக் கொள்ள முடியாமல் போனது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பெரும் 23

### ஜெனிவா செல்லும் சிறீதரன் எம்.பி
## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பிரதிநிதிகளும் செல்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்டதரப்பினர் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜெனிவா செல்லவுள்ளனர்.

சிவஞானம் சிறீதரன் நாளை ஜெனிவா செல்லவுள்ளார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கங்களின் தலைவி கலாரஞ்சனி, செயலாளர் லீலாவதி மற்றும் ஆனந்த 23

## விபத்துக்குள்ளான முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பட்டா ரக வாகனம் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரி ழந்துள் 23

## கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை
### மாவை எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் 23

### ஐ.நா தீர்மானத்திலிருந்து இலங்கை விலகினாலும்
## எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற ஐ.நா சபையை வலியுறுத்துவோம்
### தமிழரசுக் கட்சி மத்திய குழுவில் தீர்மானம்

(கிளிநொச்சி)

ஐ.நா பரிந்துரைகள் மற்றும் தீர்மானத்திலிருந்து இலங்கை விலகினாலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த ஐ.நா 23

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த நடவடிக்கை

புலம்பெயர் அமைப்புக்கள் மீது சரத் வீரசேகர காட்டம்
உள்ளக விவகாரத்தை உலக விவகாரமாக்கியது நல்லாட்சி அரசு என குற்றச்சாட்டு

03ஆம் பக்கம் பார்க்க

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளை கண்காணிப்பதற்கு
### செயற்பாட்டு பணிக்குழு இணைப்பு

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொள்ளும் விசாரணைகளின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சினால் செயற்பாட்டு பணிக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

6 பேர் அடங்கிய இந்த பணிக்குழுவில் பாதுகாப்பு புலனாய்வு பிரிவின் பிரதிநிதிகளும் அடங்கியுள்ளனர். 23

# உள்நாட்டு துப்பாக்கியுடன் கம்பஹாவில் ஒருவர் கைது

(கம்பஹா)

கம்பஹா மாவட்டம் நிட்டம்புவ - பஸ்யால பிரதேசத்தில் கம்பஹா குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 35 வயதுடைய எல்லகல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர் கம்பஹா, ஹெட்டிபொல, மினுவாங்கொட மற்றும் அத்தனகல்ல ஆகிய நீதவான் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்பது மேலதிக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

நிட்டம்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

# பொதுத் தேர்தலுக்காக 7 ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவாகும்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



சந்திக்கும்போது தேர்தல்கள் ஆணைக்குழு செலவுத் தொகைகளின் சரியான தகவல்களை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

(கொழும்பு)

பொதுத்தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவில் ஒரு பில்லியன் ரூபாயை செலுத்துமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரியை கோரியுள்ளது.

இது தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் திறைசேரியின் அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

இதன்போது பொதுத்தேர்தலின் போது ஏற்படவுள்ள செலவுகள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடி உள்ளனர். இதுவரை மதிப்பீட்டின்படி பொதுத்தேர்தலுக்கான செலவு 5.500 மில்லியனுக்கும், 6.000 மில்லியன் ரூபாயுக்கும் இடைப்பட்டதாக இருக்கும்.

இது சிலவேளைகளில் 7000 மில்லியன் ரூபாயாக உயரக்கூடும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு 20.000 முதல் 30.000 வரையான பணியாளர்கள் தேவைப்படுவார்கள். அடுத்த வாரம் திறைசேரி அதிகாரிகளை சந்திக்கும்போது தேர்தல்கள் ஆணைக்குழு செலவுத் தொகைகளின் சரியான தகவல்களை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# 24 இலங்கை மீனவர்கள் பங்களாதேஷில் கைது

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் 24 பேர் பங்களாதேஷ் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷின் தென்கிழக்கில் உள்ள துறைமுக நகரமான சிட்டகொங் கடற்பரப்பில் வைத்தே இந்த மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

குறித்த மீனவர்கள் பங்களாதேஷ் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் பயணித்த 4 மீன்பிடி படகுகளையும் பங்களாதேஷ் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் 24 பேரும் நேற்று முன்தினம் படேங்கா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவர் களுக்கு எதிராக வழக்குப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. (ம)

## பணிப்புறக்கணிப்பை கைவிடுவதற்கு

# வன விலங்கு அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது



(கொழும்பு)

மூன்று நாட்களாக முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்பை கைவிடுதற்கு அகில இலங்கை ஒன்றிணைந்த வனவிலங்கு அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சர் எஸ்.எம்.சந்ரசேனவுடன் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரி இந்த பணிபுறக்கணிப்பு கடந்த 3 நாட்களாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அந்த கோரிக்கைக்கு அமைச்சர் இணக்கம் வெளியிட்டுள்ளதாக அகில இலங்கை ஒன்றிணைந்த வனவிலங்கு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் பிரகாஷ் கருணாதிலக தெரிவித்துள்ளார். (ம)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# கண்ணீர் அஞ்சலி



(2366)

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்
திருமதி நளினா குகதாசன் அவர்களின் தந்தை
**அமரர் நாகமுத்து இரத்தினம்** அவர்கள்
இறைபதமடைந்ததையிட்டு அவர்களது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம் - யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு



கடந்த 23.01.2020 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர்**

## சரஸ்வதி மாணிக்கராசா

அவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் இன்று 24.02.2020 திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"இராச பவனம்"
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

இங்கனம் : குடும்பத்தினர்.
077 442 6025

(C-9317)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
05 ❁ 10 ❁ 1939



ஆண்டவன் அடியில்
22 ❁ 02 ❁ 2020

## திருமதி பொன்னையா சேதுப்பிள்ளை

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி வீதி, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா சேதுப்பிள்ளை 22.02.2020 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியும், அமரர் வேலுப்பிள்ளை - பொன்னையாவின் அன்பு மனைவியும், அமரர் இராசரத்தினம், சிவகெங்கை ஆகியோரின் சகோதரியும், சுப்பிரமணியம், அமரர்களான நடராசா, யோகநாதன், கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும், சி.அருட்சோதி (ஆசிரியர் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பா.வளர்மதி (ஜேர்மனி), சி.கலைவாணி (டென்மார்க்), பொ.குமரன் (ஜேர்மனி), சொ.வசந்தகுமாரி (பிரான்ஸ்), பொ.சிவச்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், சிவசுப்பிரமணியம், பாஸ்கரன், சிவபரன் அருணாநிதி, சொர்ணலிங்கம், கலாரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், செந்தூரன், சுபிதா, அருட்குமரன், அயந்தினி, அபிரந்திகா, அஸ்னா, அஸ்வினா, அபினா, ஜீதுஸா, சஞ்ஜித், ஐதுரா, மதீசன், டிபுஷணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.02.2020 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று 9.00 மணியளவில் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மகள் அருட்சோதி - 0772107993, மகள் வளர்மதி - 004915788298857, மகள் கலைவாணி - 004530429874, மகன் குமரன் - 004917630192733, மகள் வசந்தகுமாரி - 0033768418639, மகன் சிவச்செல்வன் - 0033609013544
சாவகச்சேரி வடக்கு, பன்றிக்கேணி வீதி, மீசாலை.

(C-9318)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த நடவடிக்கை

## புலம்பெயர் அமைப்புக்கள் மீது சரத் வீரசேகர காட்டம்

### உள்ளக விவகாரத்தை உலக விவகாரமாக்கிய நல்லாட்சி அரசு



(கொழும்பு)

**ஜெனிவா பிரேரணையில் இருந்து அரசாங்கம் விலகும் தீர்மானத்தைத் தொடர்ந்து, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் நடவடிக்கைகளை புலம்பெயர் அமைப்புக்கள் மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருவதாக இராணுவத்தினரது உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அட்மிரல் சரத் வீரசேகர குற்றம்சாட்டினார்.**

இலங்கையின் உள்ளக விவகாரத்தை நல்லாட்சி அரசாங்கம் தங்களின் அரசியல் தேவைகளுக்காக சர்வதேசத்தின் மட்டத்தில் கொண்டு சென்றது.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பங்களிப்பை வழங்கியது. கூட்டமைப்பினர் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு கடந்த அரசாங்கத்தில் எதிர்க்கட்சியாக இருந்து செயற்படவில்லை. மாறாக புலம்பெயர் விடுதலைப் புலிகளின் அமைப்புக்களின் நோக்கங்களை சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றிக் கொள்ளவே முயற்சித்தார்கள். அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை தொடர்ந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் நடவடிக்கைகளை புலம் பெயர் அமைப்புக்கள் மிக தீவிரமாக முன்னெடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையை சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப் படுத்தும் நோக்கிலேயே காணாமல் போனோர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது.

காணாமல் போனோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் ஆரம்பத்தில் இருந்து ஒரு தரப்பினருக்கு சாதகமானது என்பதை குறிப்பிட்டோம்.

ஆகவே இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு விட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டினர். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

---

### சட்டமா அதிபர் தலையிட அதிகாரமில்லை

## விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் பயங்கரவாத அமைப்பாகவே கருதப்படும்

### மலேசிய அரசாங்கம் அறிவிப்பு



(கோலாலம்பூர்)

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட ஒரு தீவிரவாத அமைப்பாகவே கருதப்படும் என மலேசியா அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை மீள்பரிசீலனைக்கு உட்படுத்துமாறு மலேசிய சட்டமா அதிபர் முன்வைத்த பரிந்துரைக்குப் பதிலளிக்கும் வகையில் மலேசிய உள்துறை அமைச்சர் முஹைடின் யஸின் (Muhyiddin Yassin) இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு, பொது அமைதி மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலான கொள்கைகளைத் தொடர்ந்தும் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அவற்றில், பணமோசடி தடுப்பு, பயங்கரவாத எதிர்ப்பு நிதியளிப்பு மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளின் சட்டம் 2001 இன் பிரிவு 66 பி (1) இன் கீழ் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடைப் பட்டியல் தயாரிக்கப்பட்டது என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், பொலிஸ், பிற பாதுகாப்புத் துறை மற்றும் உளவுத் துறையின் தகவலின் அடிப்படையில் இந்தப் பட்டியல் அமைந்துள்ளது. இதனிடையே, விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை குறித்த விடயத்தில் தலையிட சட்டமா அதிபருக்கு அதிகாரம் இல்லை.

இதேவேளை, இந்தியா, கனடா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளும் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தொடர்ந்தும் தீவிரவாத அமைப்புக்களின் பட்டியலிலேயே உள்ளடக்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மலேசிய ஆளும் பக்காத்தான் ஹரப்பன் எனப்படும் நம்பிக்கைக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சியான ஜனநாயக செயல் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 12 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மலேசிய சட்டமா அதிபர் டொம்மி தோமஸ் சர்ச்சைக்குரிய வகையில் கடந்த 21 ஆம் திகதி கைவிட்டிருந்தார்.

குறித்த 12 பேரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருந்ததாகவும் அந்த அமைப்பை புதுப்பிக்க நிதி சேகரித்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்நிலையில், குறித்த 12 பேர் மீதான குற்றச்சாட்டுகளைக் கைவிடுவதற்கான தனது தீர்மானத்தின் காரணங்களைத் தெளிவுபடுத்தி, பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலைக் கொண்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை 'மீள் பரிசீலனை செய்யுமாறு சட்டமா அதிபர் பரிந்துரைத்திருந்தார்.

இந் நிலையிலேயே அந்நாட்டின் உள்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

---

## நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களிலும் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

### மாணவர்கள் நிலைகுறித்து மைத்திரி கவலை



(பொலநறுவை)

நகரங்களில் மட்டுமன்றி, கிராமங்களிலும் தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டியதொரு காலத்தில்தான் நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நகரம் முதல் சிறிய கிராமம் வரை, அனைத்து இடங்களிலும் போதைப்பொருள் பாவனை தலைதூக்கியுள்ளது. இதனால், எத்தனை பேரின் வாழ்க்கை அழிவடைந்துள்ளது என்பதை நாம் அவதானித்துக் கொண்டுதான்வருகிறோம்.

ஒருகாலத்தில் போதைப்பொருள் நகரத்தில் மட்டும்தான் பாவனையில் இருந்தது. இன்று, கிராமங்களிலுள்ள பாடசாலை மாணவர்களும் பயன்படுத்துகிறார்கள்.

இவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பான முழுமையான தெளிவு கிடையாது. இதனைப் பெற்றோர்கள்தான் அவதானத்தில் எடுக்க வேண்டும்.

இதிலிருந்து விடுபட விளையாட்டுக்களில் மாணவர்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். இதற்கான ஆலோசனைகளை பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் வழங்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## கட்டுநாயக்கவில் 60 பேர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளுக்கு தொடர்ந்தும் சிரமங்களை ஏற்படுத்துபவர்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கண்காணித்து வருகின்றனர்.

கடந்த வாரங்களில் பயணிகளுக்கு அழுத்தம் பிரயோகித்த 60 பேர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை 4 பேரும் நேற்றைய தினம் இரண்டு பேரும் அடங்கலாக 60 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். (ஐ)

# தொடர்ந்து ஏமாற்றும் கோலி வெற்றி முனைப்பில் நியூசிலாந்து



சுற்றுலா இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

நேற்றைய ஆட்டநேர முடிவில் தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி 4 விக்கெட் இழப்பிற்கு 144 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியா -நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வெலிங்டனில் இடம்பெற்று வருகிறது. இதில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது.

அதன்படி, தமது முதல் இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணியினர் 5 விக்கெட் இழப்பிற்கு 122 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தபோது மழை குறுக்கிட்டதால் முதல் நாள் ஆட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது.

நேற்று முன்தின இரண்டாவது நாள் ஆட்டத்தில் இந்திய அணி, முதல் இன்னிங்சில் 165 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

நியூசிலாந்து சார்பில் டிம் சவுதி, கைல் ஜாமிசன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும், டிரண்ட் போல்ட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து, தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பாட களம் நுழைந்த நியூசிலாந்து அணி, கேன் வில்லியம்சனின் அரைச்சதத்தின் துணையுடன் 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக் இழப்பிற்கு 216 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில், மூன்றாம் நாள் ஆட்டம் நேற்றுஇடம்பெற்றது. பின்னிலை வீரர்கள் அதிரடி காட்ட நியூசிலாந்து அணி தமது முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 348 ஓட்டங்கள் குவித்தது. இதன்மூலம் அவ்வணி இந்திய அணியை விட 183 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இந்தியா சார்பில் இஷாந்த் சர்மா 5 விக்கெட்டுக்களையும், அஸ்வின் 3 விக்கெட்டுக்களையும், பும்ரா, ஷமி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக களம் புகுந்த இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 144 ஓட்டங்களை எடுத்துள்ளது.

39 ஓட்டங்கள் பின்னிலையில், இன்று இந்தியா நான்காம் நாள் ஆட்டத்தை தொடரவுள்ளது.




## வருகிறார் ஹிட்மான் அண்ட்ரூ ரசல்

### திமுத் படையை சமாளிப்பாரா?



இலங்கை அணியுடன் நடைபெறவுள்ள ரி20 சர்வதேச தொடருக்கான மேற்கிந்திய தீவுகள் அணியின் 14 பேர் கொண்ட குழாம் அந்நாட்டு கிரிக்கெட் சபையினால் தேர்வுக் குழு தலைவர் ரோஜர் ஹார்பரினால் நேற்று முன்தினம்பெயரிடப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி20 சர்வதேச தொடர்களில் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி தற்போது ஒருநாள் சர்வதேச தொடரில் விளையாடி வருகிறது. இந்நிலையில் குறித்த சுற்றுப் பயணத்தின் அடுத்த தொடரான 2 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடருக்காக தற்போது மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை தங்களது குழாத்தினை வெளியிட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள குழாத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் மேற்கிந்திய தீவுகள் ரி20 அணியினை சகலதுறை வீரர் கிரண் பொல்லார்ட் வழிநடத்தவுள்ளார். மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி சகலதுறை வீரரான 31 வயதுடைய அண்ட்ரூ ரசல் கடந்த உலகக்கிண்ண தொடரின் போது உபாதை காரணமாக இடைநடுவில் வெளியேறியிருந்தார்.

அதன் பின்னர் உபாதையிலிருந்து மீண்டாலும் கூட அவரால் மேற்கிந்திய தீவுகள் அணியில் இடம்பெற முடியவில்லை. இந்நிலையில் அண்மையில் நிறைவுக்குவந்த பங்களாதேஷ் ப்ரீமியர் லீக் தொடரில் பிரகாசித்ததன் மூலம் தற்போது மிக நீண்ட இடைவெளியின் பின்னர் மேற்கிந்திய தீவுகள் ரி20 குழாமுக்கு அழைக்கப்பட்டுள்ளார். அண்ட்ரூ ரசல் ரி20 சர்வதேச போட்டியொன்றில் இறுதியாக 2018 ஆகஸ்ட் மாதம் பங்களாதேஷ் அணியுடன் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கிந்திய தீவுகளின் ஜமேய்காவில் நிகழ்ந்த கார் விபத்தில் சிக்கி அதிர்ஷ்டவசமாக பாரிய ஆபத்துக்கள் இன்றி தப்பித்த 23 வயதுடைய இளம் வேகப்பந்துவீச்சாளரான ஒஷேன் தோமஸ் இலங்கை அணியுடனான ஒரு நாள் தொடருக்கான குழாமிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தற்போது முழுமையாக குணமடைந்துள்ள ஒஷேன் தோமஸ் இலங்கை அணியுடனான ரி20 சர்வதேச தொடருக்கான குழாமில் இடம்பெற்றுள்ளார். இவர் இறுதியாக கடந்த ஆகஸ்ட்டில் இந்திய அணியுடன் ரி20 சர்வதேச போட்டியில் விளையாடியிருந்தார்.

மேலும் கடந்த வருட இறுதியில் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் அணியுடனான ரி20 சர்வதேச தொடரின் போது உபாதைக்குள்ளான பந்துவீச்சு சகலதுறை வீரர் பெபியன் அலன் உபாதையிலிருந்து குணமடைந்து ஒருநாள் குழாமில் இடம்பெற்றதுடன் தற்போது ரி20 குழாமிலும் இடம் பெற்றுள்ளார்.

அத்துடன் அதே தொடரில் உபாதைக்குள்ளாகி, குறித்த உபாதையிலிருந்து குணமடைந்து மேற்கிந்திய தீவுகள் ஒருநாள் அணியில் இடம்பெற்று, நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் சதமடித்து அசத்திய விக்கெட் காப்பு ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷேய் ஹோப் தற்போது மேற்கிந்திய தீவுகள் ரி20 குழாமிற்கும் திரும்பியுள்ளார்.

## ஆஸியுடனான போட்டியில் கடைசி நேரத்தில் வெற்றியை தமதாக்கிய தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 2ஆவது 'ரி20' போட்டியில் அசத்திய தென்னாபிரிக்க அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காக சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வென்ற நிலையில், இரண்டாவது போட்டி போர்ட் எலிசபெத் நகரில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்க அணிக்கு அணித் தலைவர் குயின்ரன் டி கொக் (70) நம்பிக்கை அளித்தார். ஹென்டிரிக்ஸ் (14), டுபிளசி (15) நிலைக்கவில்லை. வான் டெர் துசென் (37) ஓரளவு கைகொடுக்க, 20 ஓவர்களில், தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் ஆரோன் பின்ச் (14) ஏமாற்றினார். ஸ்ரீவ் ஸ்மித் (29) ஆறுதல் கொடுத்தார். அலெக்ஸ் கேரி (14) சோபிக்கவில்லை. பொறுப்பாக ஆடிய டேவிட் வோர்னர் அரைச்சதம் கடந்தார். மிட்சல் மார்ஷ் (6), மத்யூ வேட் (1) ஏமாற்றினர்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்டன. நோர்ட்ஜே வீசிய 20வது ஓவரில் 4 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது. அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில், 6 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 12 ஓட்டங்களால் வீழ்ந்தது. வோர்னர் (67), ஸ்ரார்க் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனையடுத்து 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலை அடைந்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ரி20 போட்டி எதிர் வரும் 26ஆம் திகதி கேப்டவுனில் நடக்கிறது.



## ஐ.நா.தீர்மானத்திலிருந்து விலகி

# இலங்கை மீதான அழுத்தத்தை அதிகரிக்கும் ஆட்சியாளர்கள்

## சுமந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கரணவாய்)

ஜெனிவா பொறிமுறையில் இருந்து விலகி நிற்கிறோம் என்று இலங்கை அரசாங்கம் கூறுவது இந்த நாட்டிற்கு ஒரு கேடான விடயம். அப்படி செய்வதன் மூலமாக இலங்கை மீதான அழுத்தத்தை தாங்களே அதிகரிக்கின்றனர்.

அது எங்களுக்கு நன்மையளிக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசனின் அஞ்சலி நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை கரவெட்டியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைக்கு இலங்கை அரசாங்கம் போர்க்காலத்தில் நடந்த பலவிதமான குற்றச்செயல்களை மறைப்பதற்காக அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக பல உத்திகளைக் கையாள்கின்றது.

யுத்தத்தை நடத்தியவர்கள் யுத்தத்திற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் மீண்டும் அரியணை ஏறியிருக்கிறார்கள்.

அதனால்தான் இந்தப் பொறி முறையில் இருந்து நாங்கள் விலகி நின்றோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இது சிங்கள மக்களை முட்டாள்களாக்கும் ஒரு செயற்பாடு.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இருந்து விலகி நின்றோம் என்று சொல்வதே ஒரு கேலிக்குரிய விடயம். இலங்கை அரசாங்கம் தானாக பொறுப்பெடுத்துக் கொண்ட விடயங்களை இவ்வளவு தூரம் சாத்தியமாக்கியிருக்கிறது என்று அறிக்கை வந்திருக்கிறது.

அதில் இலங்கை அரசாங்கம் இழுத்தடிக்கிறது. பல விடயங்களை இன்னமும் செய்யவில்லை. துரிதமாக செய்து முடிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

அப்படியான வேளையிலே இந்தத் தீர்மானங்களில் இருந்து நாங்கள் விலகி நின்றோம் என்பதே அந்த ஐ.நா. மனித உரிமைகள் பொறிமுறையில் ஒருகாலமும் இடம்பெறாத, செய்யமுடியாத ஒரு செயற்பாடு.

நாங்கள் விலகி நிற்கிறோம், சர்வதேசத்தோடு முரண்படப் போகின்றோம் என்று சொல்வது தான் இந்த நாட்டுக்கு கேடான விடயம். அப்படியாக செய்வதன் மூலமாக இலங்கை மீதான அழுத்தத்தை தாங்களாகவே ஆட்சியாளர்கள் அதிகரிக்கிறார்கள். அது எங்களுக்கு நன்மையளிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# பெரிய வெங்காயத்தின் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில், ஒரு கிலோ பெரிய வெங்காயத் திற்கான அதிகபட்ச கட்டுப்பாட்டு விலை 190 ரூபாயாக அறிவிக்கப்பட்ட நிலையில், பெரிய வெங்காயத்தின் விலை குறைவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 170 ரூபாயாகக் காணப்பட்டதாக கொழும்பு வர்த்தக சங்கத்தின் பிரதான அமைப்பாளர் அனில் இந்திரஜித் தெரிவித்தார்.

இதனிடையே தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 160 தொடக்கம் 165 ரூபாயாகக் காணப்பட்டதாக அந்த மத்திய நிலையத்தின் தலைவர் ஷாந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாண சின்ன வெங்காயம் தம்புள்ளை சந்தைக்குக் கொண்டுவரப்படுவதால் அதன் விலை 300 ரூபாயாக குறைவடைந்துள்ளதாகவும் ஷாந்த தெரிவித்தார். (இ7)

St John

## சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

சென்ஜோன் அம்புலன்ஸ் சான்றிதழ் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் அங்கத்தவர்களிடம் இருந்து பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது (ஆண், பெண் இருபாலாரும்). இதற்கான தெரிவு 29.02. 2020 சனிக்கிழமை காலை 10 மணிக்கு முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்தில் இடம்பெறும்.

1. முதலுதவி பயிற்றுவிப்பாளர் (பயிற்றுவிப்பின் போது கொடுப்பனவு வழங்கப்படும்)
2. உதவி மாவட்ட ஆணையாளர்கள், மாவட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள்.
03. அம்புலன்ஸ் சாரதி (மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும், பஸ் சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். முதலுதவி சான்றிதழ் தேவையில்லை)
4. கணினி தட்டச்சுதாரர்.

2365

சென்ஜோன் அம்புலன்ஸ்
இல 161, 1ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

செ.செல்வறஞ்சன்,
மாவட்ட ஆணையாளர்.

தொலைபேசி இல 075 761 0010

அவசர அம்புலன்ஸ் சேவை தெலைபேசி இல.021 321 4444

## முதலாம் ஆண்டுத் திவச அழைப்பு

கடந்த வருடம் 07.03.2019 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகள்

### அமரர் செல்வி வசந்தி பத்மநாதன்

மண்ணில் 1961 . 01 . 15



விண்ணில் 2019 . 03 . 07

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திக் கிரியைகள் 24.02.2020 இன்று திங்கட்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெற்று, மதியம் 12.00 மணியளவில் பலாலி வீதி, உரும்பிராயில் அமைந்துள்ள காமாட்சி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும். மதிய போசன நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

077 404 8838

இங்ஙனம்
திரு.வே.பத்மநாதன் (கிச்சி)
குடும்பத்தினர்.

(2364)

## விழிநீர் அஞ்சலி

### அமரர் திரு.குழந்தைவேலு கிருஸ்ணசாமி

(இரசாயண கூட்டுத்தாபன இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரந்தன்)

தோற்றம் 06 . 06 . 1946



மறைவு 22 . 02 . 2020

ஞானிமடம் பூநகரியைப் பிறப்பிடமாகவும் விவேகானந்த நகர் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்டவரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் முகாமைக்குழு உறுப்பினரும் இல்லத்தின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றி வந்தவருமான திரு.குழந்தைவேலு கிருஸ்ணசாமி அவர்கள் மரணமடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரடைகின்றோம்.

**மானிடராய்ப் பிறந்தார்க்கு மண்ணில் இறப்புண்டானாலும்**
**நெஞ்சில் ஈரமுள்ளார்–நம் மனதில் குடியிருப்பார் வாழ்வினில் இன்னல்களைக்**
**கண்டும் துவளாது வாழ்வதனை வாழ்ந்து காட்டிய அன்னையே வாழ்வு**
**நிலையானதல்ல ஆகையால் –உம் ஆத்மா இறைவன் மலரடி சேர இறைஞ்சுகின்றோம்.**

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார், உறவினர்கள் , நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்: பொன்.நித்தியானந்தம்,பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
இல்லக்குழந்தைகள், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(C-9314)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## கிரக தசாக்காலங்களில் நற்பலன் தரும் குறியீடுகள்

ஒருவருக்கு எந்த கிரகத்தின் தசா நடப்பில் உள்ளதோ அந்த கிரக வாகனத்தின் படத்தை தினமும் பார்த்து வந்தால் அந்த கிரகத்தின் தசாக்காலத்தில் கெடு பலன்கள் குறையும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

கிரக வாகனங்கள்

சூரியன்- மயில்,தேர்

சந்திரன் - முத்து விமானம்

செவ்வாய் - அன்னம்

புதன் - குதிரை

குரு - யானை

சுக்கிரன் - கருடன்

சனி - காகம்

ராகு - ஆடு

கேது - சிங்கம்

ஒருவருக்கு சூரிய தசா நடக்கும் காலத்தில் அவர் தன் வீட்டில் மயில் படத்தை மாட்டி வைக்க வேண்டும்.

ஒருவருக்கு சந்திர தசா நடக்கும் காலத்தில் அவர் தன் வீட்டில் முத்து விமானத்தின் படத்தை மாட்டி வைக்க வேண்டும்.

ஒருவருக்கு செவ்வாய் தசா நடக்கும் காலத்தில் அவர் தன் வீட்டில் அன்னப் பறவையின் படத்தை மாட்டி வைக்க வேண்டும்.

ஒருவருக்கு புத தசா நடக்கும் காலத்தில் அவர் தன் வீட்டில் யானையின் படத்தை மாட்டி வைக்க வேண்டும்.

ஒருவருக்கு சுக்கிர தசா நடக்கும் காலத்தில் அவர் தன் வீட்டில் கருடன் படத்தை மாட்டி வைக்க வேண்டும்.

ஒருவருக்கு சனி தசா நடக்கும் காலத்தில் அவர் தன் வீட்டில் காகத்தின் படத்தை மாட்டி வைக்க வேண்டும்.

ஒருவருக்கு ராகு தசா நடக்கும் காலத்தில் அவர் தன் வீட்டில் ஆட்டின் படத்தை மாட்டி வைக்க வேண்டும்.

ஒருவருக்கு கேது தசா நடக்கும் காலத்தில் அவர் தன் வீட்டில் சிங்கத்தின் படத்தை மாட்டி வைக்க வேண்டும்.



ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர் தாக்குதலில் பலியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசனின் 12 ஆம் ஆண்டு நினைவு தினம் கரவெட்டியிலுள்ள சிவநேசன் நினைவு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபை உப தவிசாளர் தினேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- மகாலிங்கம்)

## மாணவர்களுக்கு சின்னம் சூட்டல்

(யாழ்ப்பாணம்)

யா/போக்கட்டி அ.த.க. பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் தி.சிவகஜன் கலந்து கொள்வார். (இ-30-114)



மகாசிவராத்திரியை முன்னிட்டு யாழ்.நாவற்குழியில் அமைந்துள்ள உலகப் பிரசித்தி பெற்ற சிவபூமி திருவாசக அரண்மனையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள தெட்சணாமூர்த்தி திருக்கோவிலிலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. திருவாசக அரண்மனை வளாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 108 சிவலிங்கங்களுக்கு அடியவர்கள் தங்கள் கரங்களால் விசேட அபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகளை சிவபூமி அறக்கட்டளை நிர்வாகம் மேற்கொண்டிருந்தது. இதற்கமைய யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து வருகை தந்த பல ஆயிரக்கணக்கான அடியவர்கள் விசேட அபிஷேக வழிபாடுகளில் ஈடுபட்டனர். (படங்கள்:- செ.ரவிசாந்)

## இராசி பலன்

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாக நேரிடலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மேடம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் அதிகரித்து வளம் காண்பீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, தூர தேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் காலதாமதம் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

சுக் | ராகு | சூரி, சந் | புத | சனி,செவ், குரு,கேது

இராசி பலன்

சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்

24.02.2020
மாசி 12, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
பிரதமை முன்னிரவு 11.10 மணிவரை
சதயம் பிற்பகல் 4.24 மணிவரை
சுபநேரம் 12.30-2.00 மணிவரை
இராகுகாலம் 8.00-9.30 மணிவரை

வீழ்ந்தாலும் வீரன்
அடி பணிய மாட்டான்
- வளவன்

**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**தனுசு** நீண்ட நாளைய பிணக்குளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், உடன் பிறப்புக்கள் உங்களில் நலனில் அக்கறை காட்டுவர்.

**விருச்சிகம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர் வருகையுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**கன்னி** மறைமுகப் போட்டிகள் மாறும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

# அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு அறிவித்தல்

கிளி/பளை மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானக் காணிக் கொள்வனவு நிதிக்காக பழைய மாணவர் சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத பல காரணங்களினால் நடத்த முடியாமல் போய்விட்டது.

மேலும் மேற்படி அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் 04.03.2020 புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு எமது பாடசாலை வளாகத்தில் வைத்து அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு இதன் முடிவுகள் 06.03.2020 திகதி வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். (C-9351)

**பழைய மாணவர் சங்கம், பளை மத்திய கல்லூரி.**

# கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய் தாதியர் பயிற்சியாளர்

எமது வைத்தியசாலைக்கு தாதியர் பயிற்சியாளர்க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் தகுதி சான்றிதழ்களுடன் எதிர்வரும் 08.03.2020 அன்று 9.00 மணிக்கு வைத்தியசாலைக்கு சமூகம் தரவும்.

**தலைவர்**
**கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து)**
**மூளாய்**

தொலைபேசி இல:
**021 225 0441** (9.00 a.m - 4.30 p.m) (C-9316)

021 221 7603,
021 567 1532
வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு

பழைமை வாய்ந்த

# ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9249)

**ரெங்கசாமி** கண்டி, அம்பத்தன்ன - **077 112 3471**
Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# வேலையாள் தேவை

புத்தூர் மேற்கில் அமைந்துள்ள ஸ்ரீ சியான் பல்பொருள் வாணிபத்திற்கு கணக்காளராகப் பணிபுரிய வேலையாள் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**076 401 1803** (C-9310)

# யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் பல்பொருள் விற்பனை நிலையம் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 01.04.2020 தொடக்கம் 31.03.2021 வரை

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துநர்களிடமிருந்து 01.04.2020 தொடக்கம் 31.03.2021 வரையான காலப்பகுதிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றனர்.

01. வைத்தியசாலை பகுதியில் உள்ள பின்வரும் விற்பனை நிலையங்களை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்.

1.பிரதான சிற்றுண்டிச்சாலை
2.கிளினிக் கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை
3.பல்பொருள் விற்பனை நிலையம் **(Food City)**

02. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் "கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/=காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 24.02.2020 தொடக்கம் 10.03.2020 வரையான காலப்பகுதியில் (மு.ப) 9 மணி தொடக்கம் (பி.ப) 3 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப ஒரு மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 28.02.2020 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.

04. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக **(Bid Bond)** ரூபா 50,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

05.விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது தங்களால் நடாத்துகின்ற உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் **(Business Registration)** பிரதியையும் குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் மற்றும் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்ட **"A"** அல்லது **"B"** தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06.விலைக் கேள்விகள் கடித உறையின் மேல் பகுதியில் சிற்றுண்டிச்சாலையின் பெயரினைக் குறிப்பிட்டு 10.03.2020 திகதி (பி.ப) 3 மணிக்கு முன்பதாக இப் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

07. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.

08. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்காட்டப்பட்ட முகவரியில் தொலைபேசி இலக்கத்துடன் 021 222 2261 **(Exchange No 204)** தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

09. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப் பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/பிராந்திய பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.** (C-9307)

# வருடாந்த தடகளப் போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த தடகளப் போட்டி நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் தி.மதிவதனன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தம்பதியினர், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்வி அலுவலக கணக்காளர் சி.பரதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# சிறுவனை காணவில்லை



(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பகுதியில் 15 வயதுச் சிறுவன் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக பெற்றோர்களால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. கரவெட்டி மத்திதளம் குளிகிராமத்தைச் சேர்ந்த ப.கஜன் (வயது-15) என்ற சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-10-60)

# இரத்ததானம்

(கொடிகாமம்)

கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் 150 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை பாடசாலை மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது. (இ-114)

# நாட்டின் கடன்தொகை அதிகரிப்பு! எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்க வேண்டும்

## பந்துல வேண்டுகோள்



(கொழும்பு)

நாட்டு மக்கள் மீது எதிர்க் கட்சிக்கு உண்மையில் அக்கறை இருக்குமானால் கடன்தொகை உச்ச எல்லையை அதிகரிக்க பாராளுமன்றத்தில் ஒத்துழைக்க வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த ஆண்டு 2380 பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஆனால் 4550 பில்லியன் ரூபாய் அரச செலவாகக் கணிப்பிட்டிருக்கிறது. எனவே வரவிற்கும் அதிகமாக செலவு கணிப்பிடப்பட்டுள்ளமை கடன் பெற்றுக் கொள்வதற்காகவேயாகும்.

கடன் பெறாமல் எந்தவொரு அரசாங்கமும் செயற்படவில்லை. நாளொன்றுக்கான அரச செலவு சுமார் 12.5 பில்லியன் ரூபாய் தேவைப்படுகிறது. மாதமொன்றுக்கு அரசாங்கத்தைக் கொண்டு செல்ல 379 (37900 கோடி ) பில்லியன் ரூபாய் தேவைப்படுகிறது.

எனினும் அந்தளவுக்கு வருமானம் கிடைப்பதில்லை. எனவே மேலதிக கடனைப் பெற்றே நாட்டைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.


ஆனால் பாராளுமன்றம் இதற்கு அனுமதியளிக்கவில்லை. எவ்வாறிருப்பினும் அரசியலமைப்பின் பிரகாரம் மார்ச் முதலாம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதிக்குக் கிடைக்கப் பெறும் அதிகாரங்களைக் கொண்டு அரசாங்கத்தை செயற்படுத்திச் செல்வதில் எமக்கு எவ்வித சிக்கலும் கிடையாது.

எனவே ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் ஏனைய உறுப்பினர்களுக்கோ உண்மையில் மக்கள் மீது அக்கறையிருந்தால் அவர்கள் சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரி கணக்கறிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# "ஊரோடு உறவாடுவோம்"

## தாய்மொழித்தினக் கொண்டாட்டம்







(மட்டக்களப்பு)


உலக தாய்மொழி தினத்தினை முன்னிட்டு தமிழ் மொழியைக் கொண்டாடும் நிகழ்வு 'ஊரோடு உறவாடுவோம்' எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பில் இடம் பெற்றது. மட்டக்களப்பு, கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் உப்புக்குளம் எனும் கிராமத்தில் அக்கிராம மக்களின் முழுப் பங்களிப்புடன் இந்நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது.

இந்நிகழ்வில் 190இற்கும் மேற்பட்ட அறிஞர்களின் உருவப்படங்கள் மற்றும் முன்னோர் பயன்படுத்தியதும் தற்போது பாவனையில் இல்லாத புழங்கு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன், தாய்மொழி வாழ்த்து, கரகம், காவடி, நாட்டார் பாடல், மீனவர் பாடல், தமிழ் தலைவர்களின் பாடல் என பல ஆற்றுகைகள் மாணவர்களாலும் கிராம மக்களினாலும் நிகழ்த்தப்பட்டன.

மேலும், மொழி சார்ந்து பல உரையாடல்கள் நடைபெற்றதுடன் 'விவசாயத் தொழிலின் பின்னுள்ள மொழி' எனும் தலைப்பில் கிராம முதியோர்களை வைத்து ஆக்கபூர்வமான கலந்துரையாடல் செயல் ரீதியாக இடம்பெற்றது. (ஜ)





**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் இளவாலைப் பொதுச் சந்தைத் தொகுதியானது சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜாவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.**

# சொல்வதை செய்து காட்டுவதே இ.தொ.கா.

## ஆறுமுகம் தொண்டமான் கூறுகிறார்



(பொகவந்தலாவ)

சமூகத்துக்காக வேலை செய்யும் கட்சியே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாகும். எனவே, கட்சி அடிப்படையில் அல்லது பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள அனைவருக்கும் வீடுகள் வழங்கப்படும் என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், சொல்வதை செய்து காட்டுவதே எங்கள் கொள்கையாகும் என்றும் தெரிவித்தார்.

பொகவந்தலாவ கீழ்பிரிவு தோட்ட மக்களுக்கான தனி வீட்டுத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தோட்டத்தில் 212 குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களுக்கான தனி வீட்டுத்திட்டத்தின் முதற்கட்டமாக 100 வீடுகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக மேலும் 112 வீடுகள் அமைக்கப்படும்.

அப்போது வீடில்லாப் பிரச்சினை முழுமையாக முடிவுக்கு வரும். காங்கிரஸ் என்பது சமூகத்துக்காகவே வேலை செய்து வருகின்றது. சிலர் கடந்த காலங்களில் கட்டுக்காக மட்டுமே வேலை செய்தனர்.

எனவே, யார் எந்த கட்சியில் அங்கம் வகித்தாலும் உங்களுக்கு வந்து சேரவேண்டியவை நிச்சயம் வரும். அவற்றை நாம் பெற்றுக்கொடுப்போம்.

அத்துடன், வீட்டுத்திட்டம் என்பது உரிய நடைமுறைகளை பின்பற்றி தரமாக அமைக்கப்படும். பயனாளர்கள் தேர்வுகூட நீதியான முறையிலேயே நடக்கும்.

குறிப்பாக ஓர் லயத்தை எடுத்துக்கொண்டால் வீடு அத்தியாவசியமாக தேவைப்படுவோருக்கு முதலில் வழங்கப்படும்.

அதன்பின்னர் ஒரே வீட்டில் இரண்டு குடும்பங்கள் இருந்தால் அவர்களுக்கு வழங்கப்படும். மூன்றாம் கட்டமாக லயத்தில் எஞ்சியவர்களுக்கு வழங்கப்பட்டு, அந்த லயன் முழுமையாக உடைக்கப்படும்.

தோட்ட நலன்புரி அதிகாரி ஊடாக தேர்வு என்பது உரிய வகையில் இடம்பெற வேண்டும் என தோட்ட முகாமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் தோட்ட அதிகாரிகளாக கடமையாற்றுபவர்களும், தோட்டத்தில் பிறந்து எந்த தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களும் வீட்டுத்திட்டத்துக்குள் உள்வாங்கப்படுவார்கள்.

ஏனெனில் மலையகத்தில் லயத்து வாழ்க்கைக்கு முழுமையாக முடிவு கட்ட வேண்டும் என்பதே இந்திய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. நாமும் அதனையே விரும்புகின்றோம்.

வீட்டுத்திட்டம் முழுமைபெறும் கையோடு தண்ணீர், மின்சாரம் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

அதற்கான நிதி எனது அமைச்சு ஊடாக வழங்கப்படும். கிடைக்கும் வளத்தை முறையாகவும், முழுமையாகவும் பயன்படுத்துவோம். கடந்த காலத்தில் பாரிய கற்பாறையின் கீழ்கூட வீடுகள் கட்டப்பட்டு வளம் வீண்விரயம் செய்யப்பட்டது.

வீடமைப்பு திட்டத்தை கண்காணிக்கும் பொறுப்பும் மக்களுக்கு இருக்கின்றது. தரமாக இடம் பெறுகின்றதா, எத்தகைய மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றெல்லாம் பாருங்கள்.

குறைபாடுகள் இருந்தால் அறிவிக்கவும். மாறாக நிர்மாணப் பணிகள் முடிந்த பின்னர், அறிவிப்பதில் பயன் இருக்காது.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மார்ச் முதலாம் திகதி முதல் ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்பதையும் உறுதியாக கூறிக்கொள்கின்றேன். அன்று 140 ரூபாய் என்றதும் அவர்களுக்கு ஆதரவு வழங்கினீர்கள்.

ஆனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதைப் போல 50 ரூபாயில் வந்துநின்றனர். அதுவும் வழங்கப்படவில்லை. தீபாவளிக்கு 5000 ரூபாய் வழங்கப்படும் என்றார்கள். அதையும் நம்பினீர்கள். இறுதியில் என்ன நடந்தது?

இன்றுள்ள அரசாங்கம் அப்படி அல்ல. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான இந்த அரசாங்கம் சொல்வதை நிச்சயம் செய்யும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அப்படித்தான் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காத தமிழ், முஸ்லிம் மக்கள் கூட இம்முறை ஆதரவு வழங்கத் தயாராகி விட்டனர்

## எஸ்.பி.கூறுகிறார்



(கொத்மலை)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெருகிவருகிறது. எனவே, ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிக்காத தமிழ், முஸ்லிம் மக்கள்கூட இம்முறை ஆதரவு வழங்கத் தயாராகிவிட்டனர் என்பது கருத்துக் கணிப்புக்கள் மூலம் உறுதியாகியுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொத்மலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரிடம், குறித்த சந்திப்பு முடிவடைந்த பின்னர் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் கூறியதாவது,

"பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கறிக்கையை அரசாங்கம் மீளப்பெற்றுள்ளதால் நாட்டில் நிதி நெருக்கடி எதுவும் ஏற்படாது. மார்ச் 2 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நிதி அதிகாரம் ஜனாதிபதியின் கீழ் வந்துவிடும். அதன்பின்னர் சிறந்த முறையில் நிதி முகாமைத்துவம் இடம்பெறும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின்போது வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கியவர்கள், நிர்மாணப்பணிகளில் ஈடுபட்டவர்கள் என ஒப்பந்தக்காரர்களுக்கான வழங்கவேண்டிய கொடுப்பனவை வழங்கும் நோக்கிலேயே நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், குரோதமனப்பான்மையால் அதனை சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்க்கட்சி நிராகரித்துவிட்டது.

அதேவேளை, கூட்டணி அமைத்தாலும், அமைக்காவிட்டாலும் கூட தேர்தல் காலங்களில் விருப்பு வாக்குக்காக கட்சிகளுக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது வழமையே. 1978 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறைமையே இதற்குக் காரணம். ஸ்ரீமாவோ காலத்திலிருந்து இதனை மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டாலும் முடியாமல்போனது. சிறு கட்சிகள் இந்தத் தேர்தல் முறைக்கு ஆதரவாக இருக்கின்றன.

ஆனால், அடிப்படைவாதிகள், இனவாதிகள், சிறுகட்சிகள் இல்லாமல் நாட்டை ஆளமுடியும் என்பதை மகாநாயக்க தேரர்களின் தலைமையில் நாட்டு மக்கள் ஜனாதிபதி தேர்தலின்போது நிரூபித்துக்காட்டியதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் எமக்கு 127 ஆசனங்கள் கிடைப்பது உறுதி. இருந்தாலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையே எமது இலக்கு. அதற்காக நுவரெலியா, அம்பாறை, வவுனியா போன்ற மாவட்டங்களை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே என்னை இங்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெருகி வருவதாகவும், ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிக்காத தமிழ், முஸ்லிம் மக்கள்கூட இம்முறை எமக்கு வாக்களிப்பார்கள் எனவும் கருத்து கணிப்புக்கள் மூலம் உறுதியாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தென்கொரியாவில் "கொவிட்-19" இலங்கையர்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம்

(சியோல்)

கொவிட் -19 (கொரோனா) வைரஸ் தொற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தென்கொரியாவில் வசிக்கும் இலங்கையர்களை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அந்நாட்டிற்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்தது.

இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது. சியோலில் (Seoul) உள்ள இலங்கை தூதரகம் தென்கொரியாவில் தற்பொழுது பரவிவரும் கொவிட்-19 வைரஸ் தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

விசேடமாக டெகு (Daegu) நகரில் பரவிவரும் இந்த நோய் தொடர்பில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தென்கொரியாவில் தற்பொழுது 20 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றி வருகின்றனர். மாணவர்கள் சிலரும் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். டெகு (Daegu) நகரில் சுமார் 915 இலங்கையர்கள் இருப்பதாகவும் அமைச்சு தெரிவித்தது.

தற்பொழுது அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளை கருத்தில் கொண்டு அங்குள்ள இலங்கைத் தூதரகம் 24 மணித்தியாலமும் அவசர தொலைபேசி சேவையை நடைமுறைப்படுத்தி இருப்பதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்தது. இந்தத் தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு: (0082)-2-735-2966, (0082)-2-735-2967, (0082)-2-794-2968

இதற்கு மேலதிகமாக அங்குள்ள இலங்கையர்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கு 2 சமூக ஊடகக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொரியாவிலுள்ள இலங்கை மத வழிபாட்டுத் தலங்கள் , ஊழியர் சமூக மற்றும் கல்வி கற்கும் மாணவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்தது.

கொவிட். -19 தொற்று காரணமாக தென் கொரியாவில் தற்போது 156 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. கொவிட் - 19 தொற்று தொடர்ச்சியாக பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் தென்கொரிய அரசு விசேட வேலைத் திட்டங்களை செயற்படுத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்கிளை பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் 14 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எம்.எக்ஸ்.சர்வானந்தன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி செல்வகுமாரி நேசரட்ணம், பிரதேச செயலக கணக்காளர் திருமதி ராதிகா நியூசிலன், யாழ்.மவட்ட பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத் தலைவர் என். சிவரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# கொரோனாவிலிருந்து முற்றாக விடுபட சீனாவுக்காக சிவராத்திரியன்று பிரார்த்தனை செய்த இந்துக்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ்க்கு எதிரான போரில் சீனாவின் வெற்றிக்காக பிரார்த்தனைகளை ஒழுங்கு செய்வதில் ஏனைய மதத்தவர்களுடன் இலங்கையின் இந்துக்களும் கடந்த வெள்ளிக்கிழமை இணைந்துகொண்டனர்.

சிவராத்திரி தினமான கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கொச்சிக்கடையில் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் பிரார்த்தனை நிகழ்வொன்றை இலங்கை -சீன பத்திரிகையாளர்கள் சங்கம் (Sri Lanka - China Journalists' Forum) ஏற்பாடு செய்திருந்தது.



ஆலயத்தின் மணி ஒலிக்க சிவாச்சாரியார்கள் மந்திரங்களை ஓதி சிவபெருமானுக்கு மலர்களால் அர்ச்சித்து அங்கு கூடியிருந்த பெருந்திரளான அடியவர்களுக்கு அருள் வேண்டி பிரார்த்தித்தனர். பல்வேறு வகையான பழங்களும் படைக்கப்பட்டன.

இதில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் பேச்சாளர் லுவோ ஷொங், கொழும்பு இந்திய தமிழ்ச் சமூகத்தின் தலைவரும் முன்னாள் இந்து சமய விவகார அமைச்சருமான மனோ கணேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய மனோ கணேசன், "இலங்கை நெருக்கடியை எதிர்நோக்கிய சந்தர்ப்பங்களில் எல்லாம் சீனா உதவ வந்திருக்கிறது. இப்போது சீனா ஆட்கொல்லி கொரோனா வைரஸ் பரவலினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது சீனாவுக்கு ஆதரவை நாம் வெளிக்காட்ட வேண்டிய தருணம் வந்திருக்கிறது.

ஆனால், இலங்கையர்களாகிய நாம் செய்யக்கூடியதெல்லாம் இந்த வைரஸ் தொற்று கொள்ளை நோயில் இருந்து சீனா விடுபடுவதற்கு பிரார்த்திப்பதேயாகும்" என்று தெரிவித்தார்.

பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்கள் ளிப்படுத்திய நல்லெண்ண உணர்வுகளுக்கு பதிலளித்துப் பேசிய கொழும்பு சீனத்தூதரக பேச்சாளர் லுவோ ஷொங் "கொரோனா வைரஸ்க்கு மதமோ, தேசமோ அல்லது எல்லைகளோ கிடையாது. அதனால், எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த தேசத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவற்றுக்கு அப்பால் எல்லோரும் இந்த வைரஸ்க்கு எதிரான போராட்டத்தில் ஐக்கியப்பட வேண்டியது அவசியமானதாகும்.

சீன அரசாங்கத்தினதும் சீனத் தலைவர்களினதும் வழிகாட்டலின் கீழ் சீனாவின் 140 கோடி மக்களும் இந்த வைரஸை தோற்கடிப்பார்கள் என்ற உறுதியான நம்பிக்கையை நாம் கொண்டிருக்கின்றோம்.

கிறிஸ்தவ தேவாலயங் களிலும் கோவில்களிலும் பள்ளிவாசல்களிலும் சீனாவுக்காக பிரார்த்தனைகளில் ஈடுபட்டமைக்காக இலங்கையர்களுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்"

கடந்த சில வாரங்களாக பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் என்று இலங்கையின் நான்கு மதங்களையும் பின்பற்றுபவர்கள் தங்களுக்குரிய வணக்கத்தலங்களில் வைரஸ் கொள்ளை நோயிலிருந்து சீனாவின் விரைவான மீட்சிக்காக பிரார்த்தித்து வருகின்றார்கள்.

இது சகல வர்க்கங்களையும் மதங்களையும் இனக்குழுமங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் சீனா மீது கொண்டிருக்கும் நல்லெண்ணத்தை பிரதிபலித்து நிற்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக சி.சுயாந், உப தலைவராக சா.பிரபாகரன், செயலாளராக மா.சங்கர்ராஜ், உப செயலாளராக ச.சுவேந்திரன், பொருளாளராக ச.ரவீந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

• • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் இடம்பெற்றது. இதில் தலைவராக சொ.சிவயோலிங்கம், உப தலைவராக திருமதி மலர்விழி ஸ்ரீகந்தராசா, செயலாளராக த.அருணகிரிநாதன், உபசெயலாளராக கி.மணிராஜ், பொருளாளராக திருமதி றாஜினி ஜெயகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

# திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம்

## சிவராத்திரியன்று அங்குரார்ப்பணம்


(குப்பிழான்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக் கேதீஸ்வரம் ஆலயத்திற்கு www.ketheeswaram.com எனும் பெயரில் உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டு ள்ளது. அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரியன்று இரவு ஆலயத் திருப்பணிச் சபையின் ஏற்பாட்டில் நடை பெற்றது.

மேற்படி இணையத்தள முக வரியூடாக ஆலயத்தின் அபிஷேக த்திற்கான முற்பதிவுகளை மேற் கொள்ளலாம். பூசை நேரங்கள், ஆலயத்தினருடன் தொடர்பு கொள்ளும் வசதிகள் என்பனவும் இந்த இணையத்தளம் வாயிலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அன்னதானம் வழங்குவதற்கான முற்பதிவு மேற்கொள்வதுடன் நன்கொடைகளும் வழங்கலாம். அத்துடன் ஈ ரிக்கற் ஊடாக அர்ச் சனையும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு ttrsmannar@gmail.com எனும் ஈமெயில் முகவரியூடாகவோ அல் லது 0232 050 800 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9-18)

# வவுனியாவில் தேசிய மக்கள் சக்தி மாநாடு



(நெளுக்குளம்)

வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட மாநாடு "மக்கள் சக்தியை கட்டியெழுப்பு வோம்" எனும் தொனிப் பொரு ளில் நேற்று வவுனியாவில் இடம் பெற்றது.

வன்னி மாவட்ட அமைப் பாளரும் வவுனியா தெற்கு பிர தேச சபை உறுப்பினருமான உப் பாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மக்கள் மத்தியில் சிறந்த சக்தியை கட்டி யெழுப்பும் செயற்பாடுகள், இலங் கையில் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள், ஆட்சி யாளர்களின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந் நிகழ்வில் மக்கள் விடு தலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா, முன்னாள் பாராளுமன்ற உறு ப்பினர் இ. சந்திரசேகரன், நல் லாட்சிக்கான தேசிய முன்னணி யின் நிறைவேற்று குழு உறுப்பி னரும் சட்டத்தரணியுமான முஜி புர் ரகுமான் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்த னர். (9-299)

# பகிரங்க அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் வழ க்கு இலக்கம் AR/1651/18 வழக்குடன் தொடர்புடைய சான்றுப் பொருளான NP/ BBT 4876 இலக்க மோட்டார் சைக்கிள் தர்மபுரம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை உரிமை கோருபவர்கள் யாரா வது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 30.04.2020 ஆம் திகதிக்கு முன்னர் மன்றுக்கு சென்று பதிவா ளரைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (9)

# இளைஞர் பாராளுமன்ற தேர்தல்; ஆர்வத்துடன் வாக்களித்த இளையோர்

(பனிக்கன்குளம்)

இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக் கான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அந்தவகையில் முல்லைத் தீவு மாவட்டத்தின் துணுக்காய், ஒட்டு சுட்டான், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, மணலாறு ஆகிய 6 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு கள் இடம்பெற்றன.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 22 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 3 வேட்பாளர்களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 3 வேட்பாளர்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 5 வேட்பாளர்களும் மணலாறு பிரதேச செயலக பிரிவில் 2 வேட்பாளர்களும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 5 வேட்பாளர்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 4 வேட்பாளர்களும் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர். முல்லைத்தீவு மாவட்டத் தின் 6 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இருந்து 6 இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தளவிலே அதிகளவான அக்கறை யோடு இளைஞர்கள் போட்டியிட்டு வாக்க ளித்ததை காணக்கூடியதாக இருந் தது. (9-281)

# காலாவதி திகதி முடியும் முன்னர் பழுதடைந்திருந்த உணவு!

## பாவனையாளர் அதிர்ச்சி

(நெளுக்குளம்)

வவுனியா வர்த்தக நிலையம் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை கொள்வனவு செய்யப்பட்ட ஆட் டாமா சப்பாத்தி காலாவதித்திகதி முடிய முன்னரே பூஞ்சணம் பிடி த்த நிலையில் காணப்பட்டதால் பாவனையாளர் அதிர்ச்சியடைந் துள்ளார்.

கொழும்பில் பொதிகள் செய் யப்பட்டு வியாபார நிலையங்க ளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வரும் ஆட்டமா சப்பாத்தியே இவ் வாறு பூஞ்சணம் பிடித்த நிலையில் பொதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. 11.02.2020 உற்பத்தி திகதியும் காலாவதித்திகதி 25.02.2020 என்று காணப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 21.02. 2020 வவுனியா விலுள்ள வர்த்தக நிலையத்தில் குறித்த ஆட்டமா சப்பாத்தி கொள் வனவு செய்யப்பட்டு இரவு உண விற்காக எடுத்துச் செல்லப்பட்டு தயார் செய்வதற்கு பொதி பிரித்துப் பார்வையிட்ட போது சப்பாத்தியில் பூஞ்சணம் பிடித்துக்காணப் பட்டுள்ளது.

காலாவதித்திகதியாக நான்கு தினங்கள் இருக்கும் நிலையி லேயே குறித்த சப்பாத்தி பூஞ் சணம் பிடித்த நிலையில் காண ப்பட்டுள்ளது இவ்வாறான உண வுப் பொருட்கள் குளிரூட்டியில் வைக்கப்பட்டு பாதுகாப்பு மேற் கொள்ளுமாறு பொதியில் பதி வேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் பொதிகள் செய் யப்படும் உணவுப் பொருட் களின் தரம், தராதரம், பாதுகாப்பு என் பனவற்றை வர்த்தக நிலையங் களில் பரிசீலனை செய்து நோயா ளர்கள் உட்பட பாடசாலை மாண வர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் இவ்வாறான பழுதடைந்த உண வுகளை உண்பதை தவிர்க்கப்ப வேண்டும்.

வவுனியா நுகர்வோர் பாது காப்பு அதிகாரசபையினர், பொது சுகாதாரத்துறையினர் இவ்விடய த்தில் கவனம் எடுத்துச் செயற் படுமாறு பொதுமக்கள் தெரி வித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து வவு னியா வர்த்தகர் சங்கத்திடம் கேட்டபோது, வவுனியாவிலுள்ள குறித்த சப்பாத்தி பொதிகளை விநியோகம் செய்யும் விநியோக ஸ்தரிடம் தொடர்பு கொண்டு வினவியுள்ளதாகவும் கொழு ம்பில் பொதி செய்யப்பட்டு விநி யோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் வர்த்தக நிலையங்களிலுள்ள குளிரூட்டியில் வைத்து வாழ்க் கையாளர்களுக்கு விநியோகம் செய்யுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கியதுடன் நுகர்வோர் பாது காப்பு அதிகார சபையினருடன் தொடர்புகொண்டு மேலதிக நட வடிக்கை மேற்கொள்வதாகவும் இனிவரும் காலங்களில் இவ் வாறான நடவடிக்கை இடம் பெறாமல் இருப்பதற்குரிய நட வடிக்கை எடுப்பதாகவும் தெரி வித்தனர். (9-299)




# தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம்






(பரந்தன்)

தமிழரசுக்கட்சி மத்திய செய ற்குழு கூட்டம் தமிழரசுக் கட்சி யின் தலைவர் மாவை. சேனா திராஜா தலைமையில் கிளி நொச்சி தமிழரசுக்கட்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவரும் முன் னாள் எதிர்க்கட்சித் தலைவ ருமான இரா.சம்பந்தன், நாடா ளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன்.ஞா.ஸ்ரீநேசன், இ.சரவணபவன்.எஸ்.சிறீதரன்.சிவ மோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, துரைரட்ணசிங்கம் , மற்றும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (9-312)



மல்லாவி யோகபுரம் யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயத்தில் சிவ ராத்திரியை முன்னிட்டு பாஸையூர் சென்.அன்ரனிஸ் கலைக்கழகத்தினால் வீரபாண்டிய கட்டபொம்மன் நாட்டுக் கூத்து மேடையேற்றப்பட்டது.(படம்-கொழும்புத்துறை செய்தியாளர்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் மஹா சிவராத்திரி பெருவிழா மிகச் சிறப்பாக இடம்பெற்றது.பூஜை வழிபாடுகளை தொடர்ந்து கலை நிகழ்வுகள் ஆலய வளாகத்தில் இடம்பெற்றன. தான்தோன்றீஸ்வர பெருமானை தரிசிப்பதற்காக பல்வேறு மாவட்டங்களில் இருந்து பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் வருகை தந்திருந்தனர். (படங்கள் -பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இலங்கையின் வறுமை நிலைக்கு ஆட்சியாளர்களாக இருந்த கொள்ளையர்களே காரணம்

**ஜே.வி.பி.தெரிவிப்பு**

(நெளுக்குளம்)

இலங்கையின் வறுமை நிலைக்கு 72 வருடங்களாக மாறி மாறி ஆட்சியாளர்கள் என்ற பெயரில் இருந்த கொள்ளையர்களே காரணம் என ஜே.விபியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய யாழ்.மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்டத்திற் கான மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

இலங்கையில் உள்ள எல்லாப் பிரதேச மக்களும் ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம். ஆட்சியாளர்கள் தாம் ஆட்சியை கைப்பற்றிக்கொள்வதற்கும் தங்களது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் தங்கள் மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தி தாங்கள் ஆட்சிப்பீடமேறி குபேரர்களாக மாறி கொள்ளையடித்தது மாத்திரமின்றி நாட்டை இலஞ்சம் ஊழலில் கொடிகட்டி பறக்க விட்டார்களே தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

எமது நாடு எதியோப்பியாவை விட கீழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நாடாக காணப்படுகின்றது. எமது நாடு ஒரு காலத்தில் செல்வ நாடாக அனைத்து வளங்களும் உள்ள நாடாக இருந்தது. தற்போதும் அனைத்து இனத்தவரையும் ஒரு கொடியின் கீழ் கொண்டு வருவோமேயானால் அனைத்து வளங்களையும் பாதுகாத்தால் எமது நாட்டை செல்வந்த நாடாக கொண்டு வர முடியும். ஆனால் அவ்வாறான நாட்டைவறிய நாடாக மாற்றியவர்கள் யார்? பிணைமுறி மோசடியில் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமல்ல ராஜபக்ஷ குடும்பத்தினரும் ஈடுபட்டுள்ளமை தற்போது தெரிய வந்துள்ளது. இந்த கொள்ளைக் கூட்டமே எமது நாட்டை இந்த வறுமை நிலைக்கு தள்ளிய பாவிகள்.

இந்நிலையில் வறுமை கூடிய மாகாணமாக வட மாகாணமே காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் எந்தவிதமான அபிவிருத்தியையும் காணாமல் தேர்தல் காலத்தில் மாத்திரம் யானையை தருகின்றேன்.பூனையை தருகின்றேன் என போலி வாக்குறுதி களை வழங்குகின்றார்களே தவிர இதில் இருந்து மாற்று வழிகளை யாரும் பெற்றுத்தரவில்லை. எனவே வன்னி மக்கள் விழித்தெழ வேண்டும் என மேலும் தெரிவித்தார். (9-299)

# வன்னியில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 3500 கொங்கிறீட் வீடுகள்

**மஸ்தான் எம்.பி.தெரிவிப்பு**

(குருமன்காடு)

வன்னியில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தலா 3500 கொங்கிறீட் வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியா, ஓமந்தை, மகிழங்குளம் பகுதியில் கொங்கிறீட் வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிந்தனையில் மீள்குடியேறிய மக்களுக்கான வீடுகளை விரைவாக வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த வீட்டுத் திட்டம் வழங்கப்படுகின்றது. கிழக்கு மாகாணத்திற்கு என 28 ஆயிரம் கொங்கிறீட் வீடுகளை அமைக்க அமைச்சரவை அனுமதி கொடுத்திருந்தாலும் முதல் கட்டமாக 7 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படுகின்றது. குறித்த வீடுகள் எமது பகுதிக்கும் தரப்பட வேண்டும் என நான் கோரியிருந்தேன். வவுனியா மாவட்டத்திற்கு இன்னும் 7 ஆயிரத்து 300 வீடுகள் தேவைப்படுகின்றன. மன்னார் மாவட்டத்திற்கு 6 ஆயிரத்து 500 வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 10 ஆயிரத்து 500 வீடுகளும் தேவைப்படுகின்றன. இவ்வாறு வீடுகள் தேவைப்படும் போது 28 ஆயிரம் கொங்கிறீட் வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போது வடமாகாணத்திற்கு ஒரு வீடு கூட வழங்கப்படவில்லை. அந்த நேரத்தில் அதிகாரத்தில் இருந்தவர்கள் இங்கு இந்த வீடுகள் பொருத்தமில்லை எனக் கூறி அதனை வழங்கவில்லை. ஆனால் நான் இது தொடர்பில் அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசி பதுளையில் அமைக்கப்பட்டிருந்த கொங்கிறீட் வீடுகளை பார்வையிட்ட பின்னரே இங்கும் இந்த வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுத்தோம்.

இத்தகைய வீடுகள் வன்னி மாவட்டத்திற்கு 50 வீடுகளும் யாழ். மாவட்டத்திற்கு 50 வீடுகளும் முதற்கட்டமாக தந்துள்ளார்கள். 7 ஆயிரம் வீடுகளுக்கு உரிய அனுமதி இருப்பதால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆயிரம் பொருத்து வீடுகளை விரைவாக நிர்மாணிக்க நடவடிக்கை எடுப்போம். அடுத்து வரவுள்ள 28 ஆயிரம் வீட்டில் வன்னியில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 3500 வீடுகளை கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளேன்.

அத்துடன் அரசாங்கத்தால் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கள், ஒவ்வொரு கிராமத்திலும் 5 கிலோமீற்றர் வீதி புனரமைப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன.

கடந்த காலத்தில் எப்படியோ தெரியாது. ஆனால் இந்த அரசாங்கம் மக்களுக்கான நல்ல திட்டங்களையே கொண்டு வருகிறது. இவ்வாறான அரசின் திட்டங்களை பெற்றுத் தருவதாக சிலர் பணம் கோருகிறார்கள். அல்லது வேறுவிதமாக இலஞ்சம் கோருவதாகக் கூறப்படுகிறது. அரசாங்கத்தின் திட்டங்களுக்கு எவருக்கும் பணம் கொடுக்க வேண்டியதில்லை. அவ்வாறு யாரும் கோரினால் உடனடியாக எனக்கோ அல்லது மாவட்ட அரச அதிபருக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ தெரியப்படுத்துங்கள் என மேலும் தெரிவித்தார். (9-250)

# வெடுக்குநாரிமலை ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வு





(நெளுக்குளம்)

வவுனியா நெடுங்கேணி நகரப் பகுதியிலிருந்து சுமார் 8 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் வெடுக்குநாரிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் அறநெறி மாணவர்கள் சூழ சிவராத்திரி நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

பொக்கிஷம் கனடா அமைப்பின் ஒழுங்கமைப்பில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கல்வி கற்கும் 500 அறநெறி மாணவர்கள் நெடுங்கேணி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு வருகைதந்து சிவனை தரிசித்த அதேவேளை கலை நிகழ்வுகளையும் நடத்தியிருந்தனர்.

இலங்கை அரசினாலும், தொல்லியல் திணைக்களத்தினாலும் பொலிஸாராலும் வெடுக்குநாரி மலை ஆதிசிவன் ஆலய வழிபாட்டை நிறுத்தி குறித்த ஆலய வளாகத்தை தொல்லியல்துறை அபகரிப்பதற்காக பல நீதிமன்ற வழக்குகள் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக போடப்பட்டிருந்தாலும் மக்களின் எழுச்சியால் கடந்த மூன்று வருடங்களாக பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. தமிழ் மக்களின் வரலாற்றுப் பொக்கிஷமாக கருதப்படும் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை பாதுகாக்க வேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடமை என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (9-299)




# மோ.சைக்கிளை உடைத்து பணம் திருட்டு

(குருமன்காடு)

வவுனியா நகரசபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளினை உடைத்து பணம் திருடப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்திற்கு வந்த நபர் ஒருவர் நகரசபை வளாகத்தில் மோட்டார் சைக்கி ளினை நிறுத்திவிட்டு சென்றுள்ளார். பின்னர் மதியம் மோட்டார் சைக்கிளினை எடுக்கச் சென்ற சமயத்தில் மோட்டார் சைக்கிளின் ஆசனப் பகுதி உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பணம் களவாடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த குற்றத்தடுப்பு பொலிஸார் சி.சி.ரி.வி காணொலியின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-250)

# த.தே.கூட்டமைப்பிடம் 4 கோரிக்கைகளை முன்வைத்து ஒருவர் உண்ணாவிரதப் போராட்டம்

(மன்னார்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாக பதிவு செய்வது உள்ளிட்ட நான்கு கோரிக்கை களை முன்வைத்து மன்னாரை சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் முதல் உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த இரத்தினம் ஞானசேகரம் யூலியஸ் (வயது -39) என்ற நபரே குறித்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து கட்சியை பதிவு செய்வதாக முடிவை தெரிவித்த போதும் இதுவரை கட்சியை பதிவு செய்யவில்லை. தமிழர்களின் அடையாள கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும். அக்கட்சியின் எழுத்து மூல ஆவணத்தை (யாப்பை) உருவாக்கி மக்களுக்கு பொறுப்பாக இருக்க



வேண்டும்.

சுமார் 20 வருடங்களாக இக் கூட்டமைப்பில் இருந்து சாதிக்க முடியாமல் போன தலைவர்கள் இனியும் ஏதாவது சாதிப்பார்கள் என்பது சாத்தியமற்றது. எனவே காலம் தாழ்த்தாது உங்களின் பொறுப்புக்களில் இருந்து இராஜினாமா செய்து கட்சியின் ஆலோசகர்களாக விரும்பினால் தொடருங்கள். இளைஞர்களைக் கொண்டு கட்சியைப் பலப்படுத்தி தலைமைகளை செயற்றிறன் மற்றும் துடிப்பு உள்ள அடுத்த தலைமுறையினரிடம் கைமாற்றுங்கள் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (9-285)

# கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட வடமத்திய மாகாண ஆளுநர்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் வடமத்திய மாகாண ஆளுநருமான திஸ்ஸ விதாரண மற்றும் ரஞ்சித் அபேயசேகர ஆகியோர் விவசாயிகள் மற்றும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டுள்ளார்கள். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் மற்றும் மக்கள் சந்திப்பின் போது மக்களுக்கான சுத்தமான குடி நீரினை பெற்றுக்கொள்வது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் பிரச்சினைகள் யானைகளால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-315)

# பாரதம்

## பள்ளத்துக்குள் பாய்ந்த கார்; பத்துப்பேர் பரிதாபமாகப் பலி

(ஜம்மு)

ஜம்மு-காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் 9 பேர் உயரிழந்தனர்.

கத்துவா மாவட்டத்தின் மல்ஹார் பகுதியில் பயணித்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## சந்திரயான்-3 ஓராண்டுக்குள் விண்ணில் செலுத்தப்படும்

### இஸ்ரோ தலைவர் சிவன் திட்டவட்டம்

(ஆலந்தூர்)

சந்திரயான்-3 ஓராண்டிற்குள் விண்ணில் அனுப்பத் திட்டமிட்டு பணிகள் நடைபெற்று வருவதாக இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் இஸ்ரோ தலைவர் சிவன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்ததாவது,



தரம் 9 மாணவர்களுக்கு இஸ்ரோவில் இரு வாரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கோடை விடுமுறையில் நடத்தப்படும் இந்தப் பயிற்சியில் அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்கேற்க வேண்டும். 'ககன் யான்' திட்டப்பணி சிறப்பாக நடந்து வருகிறது. இதில் செல்லக் கூடியவர்கள் தேர்வு செய்யப்பட்டு 15 மாத பயிற்சிக்காக ரஷ்யா சென்றுள்ளனர். ஓராண்டில் 'ரோபோ' உள்ள விண்கலம் முதலில் அனுப்பப்படும். அதன் பின்னர் அடுத்த 6 மாதத்தில் ஆள் இல்லாத விண்கலமும் அதன் பின்னர் மனிதர்களைக் கொண்ட விண்கலமும் அனுப்பப்படும். இதற்கான பணிகள் நடந்து வருகிறது.

அதேபோல் 'சந்திரயான்-3' திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இதையும் ஓராண்டிற்குள் விண்ணில் அனுப்ப திட்டமிட்டு பணிகள் நடந்து வருகிறது. இஸ்ரோவிற்கான விண்வெளி நிலையம் அமைப்பதற்கான பணிகள் இப்போது தொடங்கவில்லை. 'ககன் யான்' திட்டப்பணி முடிந்த பின்னர் அதற்கான பணிகள் தொடங்கப்படும்.

மீனவர்களுக்கான செயலி உருவாக்கப்பட்டு தமிழக அரசுக்கு வழாங்கப்பட்டுள்ளது. அதில் குறைகள் இருப்பதாக தெரிவித்தால் அதில் மாற்றம் செய்யப்படும். இதுவரை அதுபோல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## பொலிவியா வீதிகளில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம்!

(சுக்ரே)

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பொலிவியாவில் உள்ள கோச்சபம்பா நகரின் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

அந்நாட்டில் கடந்த சில மாதங்களாக பெய்து வரும் கனமழையால் டாக்கினா நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் குடியிருப்புகளில் தண்ணீர் புகுந்தது.

இதில் பல கட்டடங்களும் வீடுகளும் முற்றிலும் சேதமடைந்தன என்றும் மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தார்.

இதனையடுத்து அந்நாட்டின் ஜனாதிபதி ஜீனைன் அனெஸ் மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் ஆய்வு செய்தனர். (ஜ)

## நைஜீரியா, பிரான்ஸ் படையினர்களால் 120 பயங்கரவாதிகள் கொன்றுகுவிப்பு

(நியாமி)

நைஜர் நாட்டில் பயங்கரவாதிகளை குறிவைத்து நைஜீரியா மற்றும் பிரான்ஸ் படைகள் நடத்திய அதிரடி தாக்குதலில் 120 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர். ஆபிரிக்க நாடான நைஜரில், 2015 ஆம் ஆண்டு முதல் மத அடிப்படையிலான பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் அவ்வப்போது பயங்கரவாத தாக்குதல்கள் நடத்தி, பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அந்த நாட்டின் தென்மேற்கு பகுதியில், மாலி-புர்கினோ பாசோ நாடுகளின் எல்லைக்கு அருகே பதுங்கி இருந்த பயங்கரவாதிகளை குறிவைத்து நைஜீரியா மற்றும் பிரான்ஸ் படைகள் அதிரடித் தாக்குதல்கள் நடத்தின.

இந்தத்தாக்குதல்களில் 120 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர். இதை நைஜர் நாட்டின் இராணுவம் உறுதி செய்துள்ளது. கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் வாகனங்கள், வெடிகுண்டு தயாரிப்பு சாதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பயங்கரவாதத்துக்கு எதிரான ஒத்துழைப்பில் உதவிய நைஜீரியா மற்றும் பிரான்ஸ் படைகளுக்கு நைஜர் இராணுவ அமைச்சர் இசவ்பவ் கடம்பே நன்றி தெரிவித்துக்கொண்டார். (ஜ)

## நாளுக்கு நாள் உயிரைக்கு பலி எண்ணிக்கை 2,442

(பீஜிங்)

**கொரோனா வைரஸ் பாதிப்பால் சீனாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,442 ஆக அதிகரித்துள்ளது.**

சீனாவின் ஹூபே மாகாண தலைநகரான வுஹானில் இருந்து நாடு முழுவதும் பரவிய கொரோனா வைரஸ், தற்போது சீனாவை மட்டுமன்றி உலகம் முழுவதையும் அச்சத்தில் ஆழ்த்தி வருகின்றது.

இந்த வைரஸால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் சீன வைத்தியர்கள் இதனை கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், சீனாவில் தற்போது வரை கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,442 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் வைரஸால் பாதிக்கப்பட்ட

## அயோத்தியில் ராமர் சிலை; த

(டில்லி)

உத்தர பிரதேச மாநிலம், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் முடிவடையும் வரை, அங்குள்ள ராமர் சிலை தற்காலிகமாக வேறு இடத்தில் வைத்து வழிபாடு நடத்தப்படும் என, ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ர அறக்கட்டளை அறிவித்துள்ளது.

உத்தர பிரதேசம் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கான அறக்கட்டளை நிர்வாகிகள் அண்மையில் அறிவிக்கப்பட்டனர்.

3.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் கோயில் கட்டும் பணி, விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதையடுத்து, கோயில் கட்டப்படவுள்ள இடத்தை, அறக்கட்டளை நிர்வாகிகள் நேற்று முன்தினம் பார்வையிட்டனர்.

## கேலி, கிண்டலுக்கு ஆளான சிறுவன்; தாயிடம் தூக்குக்கயிறு கேட்டு கதறல்

### நெஞ்சை உலுக்கும் காணொலி



(கான்பெரா)

அவலமான தோற்றம் காரணமாக கேலி, கிண்டலுக்கு ஆளான சிறுவன் தனது தாயிடம் தனக்கு வாழ்வதற்கே பிடிக்கவில்லை என்றும் தற்கொலை செய்து கொள்ள தூக்குக்கயிறு தரும்படி கேட்டு மன்றாடும் காணொலி வெளியாகி பார்ப்போரின் நெஞ்சை உலுக்கியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரை சேர்ந்த பெண் யர்ராகா பேல்ஸ். இவரது 9 வயது மகன் குவாடன், மரபணு நோயால் பாதிக்கப்பட்டு உடல் வளர்ச்சி குன்றி காணப்படுகிறான்.

அவலமான தோற்றம் காரணமாக குவாடனை, பாடசாலையில் சக மாணவர்கள் தொடர்ந்து கேலி, கிண்டல் செய்து வருகின்றனர். இதனால் அவன் மிகவும் மனமுடைந்து போனான்.

இது குறித்து தனது தாயிடம் கூறி கதறி அழுத குவாடன், தனக்கு வாழ்வதற்கே பிடிக்கவில்லை என்றும் தற்கொலை செய்து கொள்ள தூக்குக்கயிறு அல்லது கத்தி போன்ற ஏதாவது ஆயுதம் தரும்படி கேட்டு மன்றாடினான்.

மகனின் கதறலையும் கண்ணீரையும் பார்த்து உடைந்து போன யர்ராகா, மற்றவர்களை கேலி-கிண்டல் செய்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்து உலகிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், தன் மகன் குவாடன் தற்கொலை செய்வதாக கூறி கதறி அழுத காட்சிகளை செல்போனில் காணொலி எடுத்து பேஸ்புக்கில் பதிவிட்டார். (ஜ)

# வெளிநாடு



## ...க்குடிக்கும் கொரோனா
## ...,442 ஆக அதிகரிப்பு!

...ல் உயிரி
...அதிகரித்

...ரிக்கை
...வதால்
...ப்படுத்த
...ட்டு வரு
...வில் தற்
...தாக்கம்
...எண்ணி
...
...கப்பட்ட



வர்களின் எண்ணிக்கை 76,288 இலிருந்து 77,000 ஆக அதிகரித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ...ல; தற்காலிகமாக இடமாற்றம்

...ல் ராமர்
...ட்டளை
...கப்பட்ட
...இடத்தில்
... ஆரம்
...கோயில்
...ட்டளை
...வையிட்

இதன்போது, ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ர அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், "ராமர் கோவில் கட்டுவதற்காக திரட்டப்படும் நிதியை முதலீடு செய்ய, 'ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா'வில், தனி வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 3.5 ஏக்கர் நிலத்தில், ஒரு ஏக்கரில் கோயிலும் மீதமுள்ள, 2.5 ஏக்கரில் சுற்றுவட்டாரப் பகுதிகளும் கோயிலுக்கு வருவதற்கான பாதைகளும் அமைக்கப் படவுள்ளன.

ராமர் கோவில் கட்டுமானப் பணி முடிவடையும் வரை, இங்கு உள்ள ராமர் சிலையை தற்காலிகமாக வேறு இடத்தில் வைத்து வழிபாடு நடத்தப்படும்" என அவர் கூறினார். (ஐ)

## ...வன்;
## ...றல்
...லி


...யில் சக
...கிண்டல்
... அவன்
...றி கதறி
...வதற்கே
... செய்து
... கத்தி
... கேட்டு
...ரீரையும்
... மற்ற
...ல் ஏற்ப
... விழிப்பு
...ன் மகன்
...றி கதறி
...ணொலி
(ஐ)

## சிரியாவில் இடம்பெறும் மோதல்கள் பாரிய ரத்தக் களறியில் முடியலாம்

### ஐ.நா.அச்சம்

(டமாஸ்கஸ்)

சிரியாவின் வடபகுதியில் இடம்பெற்றுவரும் மோதல்கள்



பாரிய இரத்தக்களறியில் முடிவடையலாம் என ஐ.நா.எச்சரித்துள்ளது.

சிரியாவில் கிளர்ச்சிக்காரர்களின் பிடியில் உள்ள இறுதிப் பகுதியை கைப்பற்றுவதற்காக ரஷ்யாவின் விமானப்படையின் உதவியுடன் சிரியப் படையினர் டிசெம்பர் மாதம் முதல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அலெப்போவின் வடமேற்கு மற்றும் இட்லிப்பில் இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக ஒரு மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

பெருமளவு பெண்களும் குழந்தைகளும் துருக்கி எல்லையில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஏற்கனவே 3.7 மில்லியன் சிரிய அகதிகள் தனது நாட்டில் உள்ளதை சுட்டிக்காட்டியுள்ள துருக்கி தன்னால் மேலும் அகதிகளிற்கு இடமளிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளதுடன் இட்லிப்பை நோக்கி சிரியப் படையினரின் முன்னேற்றத்தை முறியடிப்பதற்காக தனது படையினரை பயன்படுத்தப்போவதாகவும் இதன் மூலம் மனிதாபிமான நெருக்கடியை முறியடிக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளது.

கடும் குளிரின் மத்தியில் சிரிய அகதிகள் வீதியோரங்களிலும் தோட்டங்களிற்குள்ளும் உறங்குகின்றனர் என்றும் சுட்டிக் காட்டியுள்ளது. இந்நிலையிலேயே ஐ.நா.இரத்தக்களறி குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஐ-2)

## பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

### வெள்ளை மாளிகை வேண்டுகோள்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாதிகள் மீது அந்த நாடு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்க வெள்ளை மாளிகை வலியுறுத்தியது.


அமெரிக்க ஜனாதிபதியின் இந்திய வருகை குறித்து வோஷிங்டனில் வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றம் தணிய வேண்டும் என்றும் இருநாடுகளும் கருத்து வேறுபாடுகளை மறந்து மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் என்றும் பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு காண வேண்டும் என்றும் ஜனாதிபதி ட்ரம்ப் விரும்புகிறார் எனச் சுட்டிக்காட்டியது.

அத்துடன் பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாதிகள் மீது அந்த நாடு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்போதுதான் இந்தியா, பாகிஸ்தான் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்துவார் எனத் தெரிவித்தார். (ஐ)

## கேலி, கிண்டலுக்குள்ளான சிறுவனுக்கு மைதானத்திற்குள் கம்பீர வரவேற்பு

### நெகிழ்ச்சியான சம்பவம்




(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் பாடசாலை ஒன்றில் மாணவர்களால் கேலி கிண்டலுக்குள்ளான சிறுவனை ஆல்-ஸ்டார் ரக்பி அணியினர் மைதானத்திற்கு அழைத்து வந்து அணியை வழிநடத்தும் காட்சிகள் சமூகவலைத் தளங்களில் வைரலாகியது.

வளர்ச்சியின்மை காரணமாக குறித்த சிறுவன் பாடசாலையில் எதிர்கொண்ட துன்பங்களை தனது தாயிடம் தெரிவித்து, தான் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன் எனவும் தெரிவித்து மனதை உருக்கும் காணொலி ஒன்று சமூக வலைத் தளங்களில் வெளியானது

இதனையடுத்து உலக நாடுகளில் அச் சிறுவனுக்கு ஆதரவாக குரல் எழுப்பப்பட்டு வருகிறது. குறிப்பாக சிறுவனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சர்வதேச ரீதியில் பிரபலங்கள் உட்பட விளையாட்டு வீரர்களும் தமது அனுதாபத்தை தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் ஆல்-ஸ்டார் ரக்பி அணியில் துன்பத்துக்குள்ளான சிறுவனை வரவேற்கும் முகமாக அவரை மைதானத்திற்கு அழைத்து வந்து அணியை வழிநடத்தும் காட்சிகள் சமூக வலைத் தளங்களில் வைரலாகின. (ஐ)

## தலிபானுடன் அமைதி ஒப்பந்தம் திகதியை அறிவித்தது இந்தியா

(வோஷிங்டன்)

உலகநாடுகள் எதிர்பார்த்துக் காத்திருந்த தலிபான் அமைப்பினருடனான அமைதி ஒப்பந்தத்தை, எதிர்வரும் 29 ஆம் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இரு தரப்பினரும் தாக்குதல்களைக் குறைப்பதற்கான உடன்பாடு நிறைவேற்றப்படும் தறுவாயில் இருப்பதாகவும் இந்தப் பின்னணியில் பரபஸ்பரத் தாக்குதல்களைக் கணிசமாகக் குறைத்துக்



கொள்வதற்கான ஒப்பந்தத்தை தலிபான் அமைப்பினருடன் தயாராக இருப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா சென்றுள்ள மைக் போம்பியோ, கடந்த வெள்ளிக்கிழமை தலைநகர் ரியாத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

'தாக்குதல் நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்வதற்கான ஒப்பந்தம் குறித்து தலிபான்களுடன் பேச்சு வார்த்தையைத் தொடங்கியுள்ளோம்.

அந்தப் பேச்சுவார்த்தையில் இரு தரப்பு கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், எதிர்வரும் 29 ஆம் திகதி அந்த ஒப்பந்தத்தை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம்' எனத் தெரிவித்தார்.

முன்னதாக, இத்தகைய ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் மேற்கொள்வதில் உறுதியாக இருப்பதாக தலிபான்களின் துணைத்தலைவர் சிராஜுதீன் ஹக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# ஐ.நா.தீர்மானங்களால் இலங்கைக்கு பாதிப்பில்லை

## ஐ.தே.க.விளக்கம்

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களால் இலங்கைக்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குறித்த ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டுக்குப் பாதிப்பை கொண்டு வந்துள்ளதாக கூறி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இரண்டு தீர்மானங்களில் இருந்து மட்டும் விலகப் போவதாகவும் அரசாங்கம் கூறுகின்றது.

எனவே அரசாங்கம் முழுமையாக இந்தத் தீர்மானங்களில் இருந்து விலகப்போகிறதா? அல்லது இரண்டு தீர்மானங்களில் இருந்து மாத்திரம் விலகப் போகிறதா? என்பது கேள்விக்குரிய விடயங்களாகும்.

மேலும் பொதுத்தேர்தல் நெருங்கிவரும் நிலையில், அரசாங்கம் மக்களைப் பிழையாக வழி நடத்த முற்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கு 3 இலட்சத்திற்கும் அதிக விண்ணப்பங்கள்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு இதுவரை 3 இலட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்தது.

ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்த பணியகங்களில் இவர்கள் இணைத்துக்கொள்ளப் படுவார்கள் என அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் 26, 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து கலந்தாலோசிப்பதற்கு இன்று அனைத்து மாவட்ட செயலாளர்களும் ஜனாதிபதி செயலகங்களுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (இ-7)

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸை தனித்துப் போட்டியிட சஜித் கூறவில்லை

## இனவாத ஊடகங்கள் மீது றிசாத் பாய்ச்சல்

(புத்தளம்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸை தாம் அமைத்துள்ள கூட்டணியில் போட்டியிடாமல் தனித்துப் போட்டியிடுமாறு, சஜித் பிரேமதாஸ தெரிவித்ததாக சில ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவதாக அக்கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் அகதி மக்கள் மத்தியில், நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சஜித் பிரேமதாஸ என்னைச் சந்தித்தபோது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டாமெனவும் கூட்டணியில் இணைந்து



போட்டியிடுமாறும் கோரிக்கை விடுத்தார்.

அதற்குப் பதிலளித்த நான், எமது கட்சி சில மாவட்டங்களில் உங்கள் தலைமையிலான கூட்டணியிலும் சில மாவட்டங்களில் தனித்தும் போட்டியிடும் எனத் தெரிவித்தேன்.

சிறுபான்மை சமூகத்தின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலேயே இவ்வாறு நாங்கள் செயற்பட முடிவு செய்துள்ளோமென தெரிவித்தேன். இதுதான் உண்மை.

எனினும் என்னையும் எனது கட்சியையும் எப்படியாவது அழித்துவிட வேண்டுமென்று அலைந்து திரிகின்ற இனவாத ஊடகங்கள், இந்த விடயத்தை திரிபு படுத்தி பொய்களைப் புனைந்து வதந்திகளைப் பரப்பியுள்ளன.

அந்த ஊடகங்களின் செய்திகளில் இந்தப் புரளிக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

சஜித் தலைமையிலான கூட்டணியில் மக்கள் காங்கிரஸின் வகிபாகம் என்னவென்பதிலும் அக்கட்சியின் முக்கியத்துவம் எந்தளவென்பதிலும் சஜித்துக்கு தெளிவான விளக்கம் உண்டு" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆசை

"எனக்கு வாழ்க்கையிலே ஒரே ஒரு ஆசைதான் சேர்!" அப்படி என்றார் ஒருத்தர். "அது என்ன?" என்று கேட்டேன். ஆசைகளை ஒழித்துவிடனும் என்பது தான் என்னுடைய ஆசை! என்றார்.

இப்படி ஆசைகளை ஒழிக்க வேண்டும். அப்படி என்பதையே ஒரு ஆசையாகக் கொள்வது அபத்தம்! என்கிறார் ஒரு பெரியவர். (ஒஹோ) இது மாதிரி... ஆசைகளை ஒழிக்க ஆசைப்பட்டால் அந்த நோக்கம் நிறைவேறுவதில்லை. அந்த முயற்சியாலே புதிதாக சில துன்பங்கள்தான் வந்து சேரும். அதிலே புதிதாக ஒரு ஆசை தலை தூக்கும் என்கிறார் அவர்.

ஆசைகளைத் தானாக விழவைத்து விடலாம். அதற்கு வழி என்ன தெரியுமா? "எந்த ஒரு ஆசைகளையுமே பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது" என்பதை உணரவேண்டும். அதை உணர்ந்தால் ஆசைகள் தானாக விழுந்துவிடும்.

அதை விட்டுவிட்டு ஆசைகளை விட்டுவிட வேண்டும் என்பதையே ஒரு ஆசையாக வைத்துக் கொண்டு அதற்காக கடுமையாக முயற்சிகளையும் செய்துகொண்டு... "நான்... ஆசைகளை விட்டுட்டு ஞானோதயம் அடைவதற்கு கடுமையாக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன் சேர்!" அப்படி என்று சொல்லிக் கொண்டிருந்தா எந்தக் காலத்திலேயும் ஞானோதயம் வரப்போவதில்லை! அதற்குப் பதிலாக துன்பம்தான் வந்து சேரும்! என்பது அவரோட கருத்து.

எந்த ஒரு ஆசையையும் பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பதை உணரவேண்டும் என்றார். அது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம். ஒரு ராஜா... அவர் மனதிலே அமைதியில்லை. எப்பொழுதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த துன்பத்தைப் போக்குவதற்கு பலவழிகளிலே என்னென்னவோ முயற்சி செய்து பார்த்தார். ஒன்றும் சரியாக வரவில்லை! கடைசியாக ஒரு காரியம் செய்தார். அதாவது ஒரு வேதாந்தியைத் தேடி போனார். அவரைப் பார்த்துக் கேட்டார்.

"ஐயா... என்னுடைய துன்பங்களிலேயிருந்து நான் விடுபட வேண்டும். அதற்கு சுலபமான ஏதாவது ஒரு வழி இருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டார்.

அதற்கு அந்த வேதாந்தி சொன்னார் "அதற்கு ஒரு வழி சொல்லுகிறேன்... அது மாதிரி செய் அதாவது உன் இராஜ்ஜியத்துக்குள்ளே போதும் என்கின்ற மனதோடு வாழும் ஒருவனைக் கண்டு பிடித்து அவனுடைய சட்டையை வாங்கி நீ போட்டுக் கொள்ள வேண்டும். அப்படிப் போட்டுக் கொண்டால் உன்னுடைய துன்பம் தீர்ந்துவிடும்" என்றார். உடனே ராஜாவுக்கு ரொம்ப மகிழ்ச்சி.

அரண்மனையிலே இருந்த அத்தனை பேரையும் ஆளுக்கு ஒரு பக்கமாக அனுப்பினார். தேடச்சொன்னார். போதும் என்கின்ற மனசுடைய ஒருவனை பிடித்துக் கொண்டு வரச்சொன்னார்.

எங்கெங்கேயோ தேடி கடைசியாய் ஒருவரைக் கண்டு பிடித்தார்கள்... அவன் போதும் என்கின்ற மனசோட இருக்கிறவன் தான். ஆனால் அவனிடம் சட்டை எதுவும் இல்லை. இடையிலே கட்டியிருக்கிற துண்டே போதும் என்கின்ற மனதோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

சட்டை இருந்தால் தானே ராஜா வாங்கி மாட்டிக் கொள்ள முடியும். அந்த வேதாந்தி ஏன் அப்படிச் சொன்னார் என்பதற்கான அர்த்தம் இப்பதான் ராஜாவுக்கு புரிந்தது.

இதுவரைக்கும் சொன்னதெல்லாம் ஞானமார்க்கத்தை தேடிக் கொண்டிருக்கிறவனுக்கான தகவல். இன்றைய இளைஞர்கள் இதைக் கேட்டுவிட்டு... நமக்கு ஆசையே வேண்டாம் என்று முடிவு பண்ணி விட்டால் வாழ்க்கையிலே முன்னேற முடியாது. நம்முடைய முயற்சிக்கு ஆசைதான் தூண்டுகோல்.

அதனாலே இந்த ஆசையையும் அந்த ஆசையையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது. ஆனால் ஒன்று நமக்கு பேராசை தேவையில்லை! நாம் படும் ஆசையிலே ஒரு நியாயம் இருக்க வேண்டும். ஏனென்றால் எங்களில் சில பேர் நீங்கதானே சேர் சொன்னீங்கள்... அதனாலேதான் ஆசைப்பட்டேன். அறை கிடைத்ததுதான் மிச்சம் என்பார்கள். கன்னத்தைத் தடவிக் கொண்டே! அதனால் இப்போதெல்லாம் எந்தத் தகவலைச் சொன்னாலும் ரொம்ப எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது.

ஒரு ஆள் ஒரு கடை வைத்து வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தான். அவனுக்கு ரொம்ப பேராசை. நிறைய பணம் சேர்க்க வேண்டும் என்று.

திடீரென்று ஒரு நாள் அவனுக்கு உடம்பு ரொம்பவும் சுகமில்லாமல் போய்விட்டது. இனிமேல் பிழைப்பது கஷ்டம் என்கின்ற நிலைமை. மரணப்படுக்கையிலே இருக்கிறான். சொந்தக்காரர்கள் எல்லாம் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள்.

இவன் மெதுவாக கண்ணைத் திறந்து... என் வீட்டுக்காரி எங்கே? என்றான். இதோ இருக்கிறேன் என்றார் அந்த அம்மா.

பசங்களெல்லாம் எங்கே? என்றான். இதோ பக்கத்திலேதான் இருக்கிறாங்க என்றார்.

பொண்ணுங்க எங்கே? என்றான் எல்லோரும் இங்கே தான் இருக்காங்க கவலைப்படாமல் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார் அந்த அம்மா.

அவன் மெதுவாக கஷ்டப்பட்டு வாயைத் திறந்து அட பாவிங்களா? எல்லோரும் இங்க இருந்தா அங்க கடையை யாரு கவனிக்கிறது? என்றானாம்.






யா/ கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) த. பாலராஜ் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் 70 மில். செலவில் 57 வேலைத்திட்டங்கள்

## அங்கஜன் எம்.பியால் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் 70 மில்லியன் ரூபாய் செலவில் 57 வேலைத் திட்டங்களுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 35 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக குறித்த திட்டத்தில் விவசாயக் கிணறுகள் திருத்துதல், வாழ்வாதார உதவிகள், சுயதொழில் பயிற்சிகள் போன்ற மக்கள் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-10-60)

# போக்குவரத்தை ஒழுங்குபடுத்த "சவாரி அப்" நேற்று அறிமுகம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்றில் முதன்முறையாக போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்தும் வகையிலான வலையமைப்பு மென்பொருள் (APP) ஒன்று உருவாக்கப்பட்டது.

2030ஆம் ஆண்டின் மட்டக்களப்பு மாவட்டத்தின் இலக்கு (Vision for Batticaloa 2030) என்னும் அமைப்பின் அனுசரணையுடன் மயூ சைபர் சொலுஷன் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தால் இந்த சவாரி என்னும் பெயரில் மென்பொருள் அப் உருவாக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் உல்லாசப்பிரயாணிகளின் வருகை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தவும் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் இந்த வலையமைப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

மயூ சைபர் சொலுஷன் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் தேவதாசன் மயூரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மட்டக்களப்பு மாவட்டத்தின் இலக்கு (Vision for Batticaloa 2030) என்னும் அமைப்பின் பிரதம ஒருங்கிணைப்பாளரும் இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளருமான இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் 300இற் மேற்பட்ட ஆட்டோச் சாரதிகள் கலந்து கொண்டதுடன் இதன்போது போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்தும் வகையிலான வலையமைப்பு மென்பொருள் (APP) தொடர்பில் அறிவுறுத்தப்பட்டது.

இன்று கொழும்பு உட்பட நகர்ப்பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை வீட்டில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு இலகுவான பல மென்பொருட்கள் இயங்கிவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் இது முதன்முறையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இந்த செயற்றிட்டத்தில் ஆட்டோ மற்றும் அன்றாட சேவையில் ஈடுபடும் வான், கார்கள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

இளைஞர்களின் ஒன்றிணைந்த வெளியீடாக உருவாக்கப்பட இந்த சவாரி மென்பொருளை ஸ்மார்ட் தொலைபேசிகளில் பதிவுசெய்து தங்களுக்கான போக்குவரத்தை செய்துகொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான முழு ஆதரவையும் இளைஞர்கள் கோரியுள்ளனர். (இ-7)

# தோல்வி உறுதி என்பதாலேயே பொதுத் தேர்தல் பொறுப்பு சஜித்திடம்

## ரணிலின் தந்திரத்தை வெளிப்படுத்திய ரத்நாயக்க

(லிந்துலை)

தோல்வி உறுதி என்பதாலேயே பொதுத்தேர்தலை வழிநடத்தும் பொறுப்பையும் சஜித் பிரேமதாஸவிடம் ரணில் விக்கிரமசிங்க ஒப்படைத்துள்ளார்" என்று இராஜாங்க அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

லிந்துலை மட்டுக்கலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எவ்வித பிரச்சினையும் இல்லாமல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் பயணம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையிலேயே அரசாங்கத்தின் நிதி அறிக்கையை தோற்கடித்து, அதன் மூலம் பிரசாரத்தை பெற்றுக்கொள்வதற்கு எதிர்க்கட்சி முற்பட்டது. எனினும், அதற்கான வாய்ப்பையும் நாம் இல்லாது செய்தோம்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அதனை செலுத்துவதற்காகவே நிதி அறிக்கை முன்வைக்கப்பட்டது. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நிதி அதிகாரம் ஜனாதிபதியின் கீழ் வந்துவிடும். அதன் பின்னர் நிதி முகாமைத்துவம் உரிய வகையில் இடம்பெறும்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் எமக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்பட்டதாலேயே நாம் புதிய கட்சியை ஆரம்பித்தோம். அதன்பின்னர் அவர்களில் சிலர் எங்களுடன் இணைந்தனர். தற்போது கூட்டணியாக பயணிப்பதற்கு இணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, முரண்படவேண்டிய அவசியமில்லை. தொகுதி பங்கீடு பற்றியும் பிரச்சினை இல்லை. அது தொடர்பில் அரசியல் சபையே முடிவெடுக்கும்.

ஜனாதிபதி தேர்தலின்போது பொறுப்பை சஜித்திடம் ரணில் வழங்கினார் அதன்போது தோல்வி ஏற்பட்டது. இம்முறையும் தோல்வி உறுதியென்பதாலேயே பொதுத் தேர்தலை வழிநடத்தும் பொறுப்பும் அவரிடம் ரணிலால் கையளிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கழிவகற்றல் தொடர்பில் நிரந்தர தீர்வு வேண்டும்

## ஜனாதிபதியிடம் மேல்மாகாண ஆளுநர் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கழிவுகளை அகற்றல் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ் விடயத்தில் நேரடியாக தலையிட்டு நிரந்தர தீர்வொன்றை வழங்குவார் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த மேல் மாகாண ஆளுநர் சீதா அரம்பேபொல, இதை தேசிய பிரச்சினையாகக் கருதி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை அண்மித்த பகுதியில் காணப்படும் சீதுவை குப்பை மேட்டில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டிருந்தது. குறித்த இடத்துக்கு நேற்று முன்தினம் நேரடி விஜயம் மேற்கொண்டிருந்த ஆளுநர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள தீ ஏனைய பிரதேசங்களுக்கு பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இது நிரந்தர தீர்வாகாது. எனவே இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குப்பை பிரச்சினைக்கு நிரந்த தீர்வு காணுதல் பற்றி அவதானம் செலுத்தியுள்ளார். எதிர்வரும் இரு மாத காலத்திற்குள் ஜனாதிபதியின் நேரடித் தலையீட்டில் இந்தப் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று சுட்டிக் காட்டினார்.

இந்தப்பகுதியில் தீப்பற்றியுள்ளது என்பதற்காக இங்குள்ள குப்பைகளை அகற்றி பிறிதொரு இடத்தில் இடுவது பொருத்தமான தீர்வாகாது. அது மேலும் பிரச்சினைகளையே தோற்றுவிக்கும். எனவே தான் இதற்கான நிரந்தர தீர்வினை வழங்கவுள்ளோம் என்றும் இந்த குப்பைமேடு 1991 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகிறது. எனவே ஓரிரு மாதங்களுக்குள் இதனை அப்புறப்படுத்த முடியாது.

நிரந்தரமாக இவற்றை எவ்வாறு அகற்றுவது என்பது பற்றியே சிந்திக்க வேண்டும்.

இதனையொரு தேசிய பிரச்சினையாக எண்ணி அனைவரும் ஒன்றிணைந்து இதற்கான தீர்வைக் காண வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

03

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### சமூக உட்கட்டமைப்பு சம்பந்தமாக நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள்

**கல்வி -**

பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை விட கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கிலான மென் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தியில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். கல்வித்துறை மீதிலான முதலீடுகளானது அறிவு சார் துறைகளின் மூலம் வழி நடத்தப்படும் பொருளாதார வளர்ச்சியினூடாக நிலை பேறான அபிவிருத்தியை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் அடிப்படை தகைமைகள் மற்றும் திறன்களுடன் கூடிய ஒழுக்கமான மனித வளத்தை கட்டியெழுப்புவதில் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கு அவசியமான அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு அவசியமான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்து கல்வியின் தரம் மற்றும் தர நிலைகளை மேம்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இம் முயற்சியின் போது, தரத்தில் பின்தங்கியிருக்கும் கிராமப்புறப் பாடசாலைகள் மீது கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**மேற்கத்தேய மருத்துவம் -**

சுகாதாரத்துறையின் கீழான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களானது நோய்த்தடுப்பு அம்சங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்து சுகாதாரத்துறையின் தரத்தினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

அனைத்து வைத்தியசாலைகளிலும் தகுதியான ஆளணியினரின் கிடைப்பனவை உறுதி செய்வதோடு, அடிப்படை சுகாதாரக் குறிக்காட்டியில் பின்தங்கிக் காணப்படும் கிராமிய பிரதேசங்களில் காணப்படும் வைத்தியசாலைகளுக்கு அவசியமான பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும். தொற்றா நோய்கள் மற்றும் தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் தடுத்தலுக்கு அவசியமான வசதிகளை மேம்படுத்தல் மற்றும் ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றிலும் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**சுதேச மருத்துவம்-**

ஆவணப்படுத்தப்படாத சுதேச மருத்துவ நடைமுறைகளை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பதனூடாக எதிர்கால சந்ததியினருக்கு சுதேச மருத்துவர்களின் சேவைகள்ளப் பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படல் வேண்டும். மக்களுக்கு சிறந்த சுதேச மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வசதிகளை மேம்படுத்துதல்.

**விளையாட்டு -**

மாகாண தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் போட்டியிடக் கூடிய வகையில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மக்கள் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மூலம் தேகாரோக்கியமான வாழ்க்கையொன்றை பராமரிப்பதற்கு அவசியமான வசதிகளை செய்து கொடுத்தல்.

**சிறுவர் பராமரிப்பு -**

சமூகத்தில் கவனிக்கப்படாத சிறார்களுக்கு நிறுவக ரீதியாக புனர்வாழ்வளித்து அவர்களையும் சமூகத்தில் சிறந்த பிரஜையாக சேர்ப்பதற்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிதி ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். விசேடமாக சிறுவர் நன்னடத்தை பராமரிப்புக்கு உட்பட்டுள்ள சிறுவர்களின் நாளாந்த அடிப்படைத் தேவைகள் மற்றும் நலன்கள் மற்றும் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்வதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

நன்னடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ள சிறார்கள் தமது 18 வயதினை அடையும் போது சமூகத்தில் ஒரு பயனுறுதியுள்ள உறுப்பினராக இணைந்து கொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் சிறுவர்களின் திறன் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும். சிறார்களின் பௌதீக மற்றும் மனநல அபிவிருத்தி, பாதுகாக்கப்பட சிறுவர்களை சமூகத்துடன் ஒருங்கிணைத்தல் முறைசாராக் கல்வி போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

கிழக்கு மாகாண குடிமக்கள் வரவு-செலவுத்திட்ட அறிமுகவிழா



**கிழக்கு மாகாண குடிமக்கள் வரவு-செலவுத்திட்ட அறிமுக விழா திருகோணமலை மாவட்டத்தில் 2019.11.06 திகதி நடைபெற்றது. கிழக்கு மாகாண சபைத் தலைமைச் செயலாளர் சனத் அபேகுணவர்த்தன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நிதி ஆணைக்குழுவின் தவிசாளர் U.H.பாலிஹக்கார, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட அரச பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதனால் மாகாண சபை நிதி எங்கிருந்து வருகிறது, எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது மற்றும் பயன்படுத்தப்படுகிறது என்பதை மக்கள் நன்கு புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.**

**சமூக சேவைகள் -**

சமூக சேவைகள் மீதான மூலதன கொடைகளான நோயாளர்கள், முதியவர்கள், அங்கவீனர்கள் மற்றும் அநாதைகள் போன்ற சமுதாயத்தில் பலம் குன்றியவர்களின் நலநோம்புகளை உறுதி செய்யும் வகையில் ஒதுக்கப்படுகின்றது. மாகாண அதிகாரிகள் ஐ.நா சபையின் வழிகாட்டல்கள் மற்றும் நாட்டின் சட்ட விதிமுறைகள் மற்றும் விதிகளுக்கு அமைவாக முதியோர் இல்லங்களை உருவாக்கி பராமரித்தல் வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய நடவடிக்கை திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு ஒரு திருப்திகரமான பங்களிப்பினையும் உறுதிப்படுத்தல் வேண்டும். முதியோர்களையும் மற்றும் அங்கவீனர்களையும் தமது வீட்டிலேயே பராமரிப்பதற்கு சமூகத்தை ஊக்குவிக்கும் வகையிலான உபாயங்கள் மற்றும் நடைமுறைகளை அறிமுகம் செய்வது முக்கியமானதாகும். மாற்றுத் திறன் கொண்டவர்களின் சமூக அந்தஸ்துகளை மேம்படுத்தும் வகையில் சுய தொழில் வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல்.

**கலாசாரம் மற்றும் சமய விடயங்கள் -**

கலாசாரத்துறை மீதான நிதி ஒதுக்கங்களானது எதிர்கால சந்ததியினருக்கு கலாசார மரபுரிமைகளை பாதுகாக்கக்கூடிய கருத்திட்டங்களில் பயன்படுத்தப்படல் வேண்டும். தொட்டுணர முடியுமான மற்றும் தொட்டுணர முடியாத கலாசார பொக்கிஷங்களை பாதுகாக்கக்கூடிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

**வீடமைப்பு மீதான நிதி ஒதுக்கம்**

வீடமைப்பு மீதான நிதி ஒதுக்கங்களானது குறைந்த வருமானம் பெறும் மற்றும் தேவையான குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு வழங்கப்படும் வீடமைப்பு கொடைகளின் போது மக்கள் பங்குபற்றல் ஊக்குவிக்கப்படல் வேண்டும். மேலும் உரிய அமுல்படுத்தல் பொறிமுறைகளுடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சலுகை வீடமைப்புக் கடன்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

**கூட்டுறவு இயக்கம்**

கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியானது கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தியை முதன்மைப்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்களின் மீது பயன்படுத்தப்படல் வேண்டும்.

**மாகாண சபை தனது வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும் போது சமூக உட்கட் டமைப்பு சம்பந்தமாக பின்வரும் விடயங்களை கருத்தில் எடுக்கவேண்டுமென நிதி ஆணைக்குழு கூறுகின்றது. அவை தரத்தில் பின்தங்கியிருக்கும் கிராமப்புறப் பாடசாலைகள் மீது கூடுதல் கவனம் செலுத்துதல், அடிப்படை சுகாதாரக் குறிக்காட்டியில் பின்தங்கிக் காணப்படும் கிராமிய பிரதேசங்களில் காணப்படும் வைத்தியசாலைகளுக்கு அவசியமான பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், மக்களுக்கு சிறந்த சுதேச மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வசதிகளை மேம்படுத்துதல், மாகாண தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் போட்டியிடக் கூடிய வகையில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்தல், சமூகத்தில் கவனிக்கப்படாத சிறார்களுக்கு நிறுவக ரீதியாக புனர்வாழ்வளித்து அவர்களையும் சமூகத்தில் சிறந்த பிரஜையாக சேர்ப்பதற்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், நன்னடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ள சிறார்கள் தமது 18 வயதினை அடையும் போது சமூகத்தில் ஒரு பயனுறுதியுள்ள உறுப்பினராக இணைந்து கொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் சிறுவர்களின் திறன் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்தல், சமூக சேவைகள் மீதான மூலதன கொடைகளான நோயாளர்கள், முதியவர்கள், அங்கவீனர்கள் மற்றும் அநாதைகள் போன்ற சமுதாயத்தில் பலம் குன்றியவர்களின் நலநோம்புகளை உறுதி செய்யும் வகையில் நிதி ஒதுக்குதல், வீட மைப்பு மீதான நிதி ஒதுக்கங்களானது குறைந்த வருமானம் பெறும் மற்றும் தேவையான குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்கு ஏற்றவாறு செய்தல், எதிர்கால சந்ததியினருக்கு கலாசார மரபுரிமைகளை பாதுகாக்கக்கூடிய கருத்திட்டங்களில் பயன்படுத்தப்படல் என்பனவாகும்.**

(தொடரும்)




வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வியாழக்கிழமை பிற்பகல் வயாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் வித்தியாசாலையின் அதிபர் ஜே.யூட் மரியரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இதன்போது இடம்பெற்ற மாணவ- மாணவிகளின் கலாசார நிகழ்வு, விநோத உடைப் போட்டி என்பன பார்வையாளர்களைக் கவர்ந்தன. (படங்கள்:-செ.ரவிசாந்)

# சின்னத்துக்கு மாத்திரம் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பவர்கள் மலையக மக்கள் என நினைக்க வேண்டாம்

# நான் "டீலர்" இல்லை; நான் ஒரு "லீடர்"

## கோபத்தை கிளற வேண்டாம் என்கிறார் மனோகணேசன்

(கொழும்பு)

சின்னத்தை மாத்திரம் கண்டு, கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பவர்கள், மலையக மக்கள் எனக்கூறி அந்த மக்களை அவமானப்படுத்த வேண்டாம். கடந்த காலங்களில் அவர்கள், யானை, பூனை, அன்னம், வெற்றிலை, வேப்பிலை, ஏணி என எத்தனையோ சின்னங்களுக்கு சிந்தித்து வாக்களித்துள்ளனர்.

பல சந்தர்ப்பங்களில் நகர மக்களை விட அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். சிலருக்கு யானை சின்னம் வேண்டும் என்பதற்காக மலையக மக்களை இதில் இழுக்க முயல்கிறார்கள். மலையகத்தோர் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் மக்கள் எனக் கூறுகிறார்கள்.

அப்படி கூறி அவர்களை அவமானப்படுத்த வேண்டாம். அவமானப்படுத்தி என் கோபத்தை கிளற வேண்டாம். எனக்கு வெறுப்பேற்றினால் நான் சும்மா இருக்க மாட்டேன்.

இது உங்களுக்குத் தெரியும் என முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகச் சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் இங்கே சின்னம் ஒரு பிரச்சினை இல்லை. அது "டீலர்"களின் பிரச்சினை. நான் "டீலர்" இல்லை. நான் ஒரு "லீடர்". எங்களைப் பொறுத்தவரையில், யானை கிடைத்தால்



நல்லது. அன்னம் கிடைத்தாலும் நல்லது. எமது கூட்டணிக்கு யானையை தர யார் மறுக்கிறார்கள் என தேடிப் பாருங்கள். அப்போது உரிய விடை கிடைக்கும். இவர்களது நோக்கம் இப்படி எதையாவது சொல்லி, எமது கூட்டணி அமைவதை தாமதம் செய்வது ஆகும்.

இந்தத் தந்திரம் எம்மிடம் இந்த முறை பலிக்காது. இன்னும் இரண்டு தினங்களில் நாம் எமது கூட்டணி அமைவதை அதிகார பூர்வமாக நாம் அறிவிப்போம். யானை இருந்தால் தான் கூட்டணி அமைக்க முடியும் என்று கூறுபவர்கள் அதை எமக்கு தர வேண்டும்.

தரவும் மாட்டீர்கள். யானை என்று ஓலம் இட்டுக்கொண்டும் இருப்பீர்கள். அப்புறம் அன்னம் என்பீர்கள் அதையும் இழுத்தடிப்பீர்கள்.போதாதற்கு யானைக்கு மாத்திரமே மலையக மக்கள் வாக்களிப்பார்கள் என கூறி என்னை வெறுப்பேற்றாதீர்கள். எனக்கு வெறுப்பேற்றினால் நான் சும்மா இருக்க மாட்டேன்.

இது உங்களுக்குத் தெரியும். கொள்கைகளைப்பார்த்து, ஆளைப் பார்த்து, கட்சியைப் பார்த்து, தெளிவுடன் வாக்களிக்க மலையக மக்களுக்கு முடியும். தெரியும். கண்ணை மூடிக்கொண்டு, பொய்களை நம்பி, பயந்து, நமது மக்கள் வாக்களித்த காலம் இன்று மலையேறிவிட்டது.

சின்னத்தை சொல்லி, சொல்லி, காட்டி, காட்டி, இழுத்தடிப்பது, ஆளுகின்ற அரசுடன் போடப்படும் "டீல்". ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள்ளேயே சாயம்வெளுத்து வரும் இந்த அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுத்தரும் "டீல்". இந்த உண்மையை வெளியே சொன்னால், உங்களுக்கு என் மீது கோபம் வருகிறது.

உங்களை போன்ற "டீலர்"களுக்கு மசிகின்றவன் நானல்ல. உங்கள் "டீல்"களை அப்படியே ஏற்றுக்கொள்ள நான் ஒரு "டீலர்" இல்லை. நான் ஒரு "லீடர்". இதை மறக்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திருடர்களுக்கு இடமளிப்பதா? இல்லையா? மக்களே தீர்மானிக்க வேண்டும் - மரிக்கார்

(கொழும்பு)

மாறி மாறி நடக்கும் கொள்ளையடிப்பை நிறுத்த வேண்டுமாயின் இரண்டு தரப்பில் இருக்கும் திருடர்களை தேர்தலில் தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எயார் பஸ் கொள்வனவில் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை கொள்ளையிட்டவர்கள் தொடர்பான விபரம் வெளியாகியுள்ளது.

நாட்டின் சாதாரண மக்களின் பணத்தை மாறி மாறி கொள்ளையிட இரண்டு தரப்பில் இருக்கும் திருடர்களுக்கு இடமளிப்பதா, இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

மக்களே வாக்களித்து விருப்பு வாக்கை வழங்கி இவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்புகின்றனர்.

சாதாரணமாக 60 வயதை கடந்து விட்டால், எவருக்கும் அரசாங்க தொழிலில் ஈடுபட முடியாது. இதனால், மாறி மாறி கொள்ளையடிப்பவர்களை மாற்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

திருடர்கள் பதவிக்கு வந்தால், மற்றைய கட்சியில் உள்ள திருடர்களை பாதுகாப்பார்கள். திருடர்கள் திருடர்களை பிடிக்க மாட்டார்கள்.

இம்முறை இரண்டு தரப்பில் இருக்கும் திருடர்களை தோற்கடிப்பது மக்களின் பொறுப்பு என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ)

## முதலீட்டுப் பணிகளை துரிதமாக முன்னெடுக்க விசேட வேலைத்திட்டம்

### பிரசன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் முதலீட்டாளர்கள் தாமதம் இன்றி முதலீடுகளை மேற்கொள்வதற்கான வசதிகளை செயற்படுத்தும் விசேட வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கமைவாக முதலீட்டு அனுமதிக்கான துரித செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 2 விசேட குழுக்கள் செயற்படும் என்று கைத்தொழில் ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் திட்ட ஆய்வுக்குழு மற்றும் காணிகளை ஒதுக்கீடு செய்யும் குழுக்கள் இவ்வாறு செயற்படவுள்ளன. திட்ட ஆய்வுக்குழு அனைத்து முதலீடுகளுக்குமான விண்ணப்பங்களுக்கு அனுமதியை வழங்கும்

காணிகளை ஒதுக்கீடு செய்யும் குழு காணிகளை உரிய முறையில் ஒதுக்கீடு செய்யும் என்று தெரிவித்த அமைச்சர் முத லீடுகளுக்கு வசதியாக வீதி அபி விருத்தி பணிகளும் துரிதமாக முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஜ)

## பேருந்துடன் நேருக்கு நேர் மோதிய கார் தாயும் மகனும் சம்பவ இடத்திலேயே பலி!

(பொலநறுவை)

ஹபரண - பொலநறுவை பிரதான வீதியின் 31 ஆவது மைல் கல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்து ஒன்றும் கார் ஒன் றும் நேருக்கு நேர் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்ற



தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில், தாயும் மகனும் உயிரிழந்ததாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# மணல் களஞ்சியசாலைகள் அதிரடிப்படையால் முற்றுகை

## சந்தேக நபர் கைது



(ஏறாவூர்)

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டிய நீர்நிலைப் பகுதிகளில் சட்டவிரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருமளவிலான மணல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மூன்று களஞ்சியசாலைகள் வவுணதீவு விசேட அதிரடிப்படையினரால் முற்றுகையிடப்பட்டன.

இந்த முற்றுகையின்போது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை வீதிப் பிரதேசத்திலுள்ள கொடுவாமடு, கித்துள் ஆகிய இடங்களில் இந்த மணல் களஞ்சியசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு 159 கியூப் மணல் விற்பனைக்காக குவிக்கப்பட்டிருந்ததாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

தொல்பொருள் ஆய்வு நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, வவுணதீவு விசேட அதிரடிப்படையினர் இந்த பாரிய முற்றுகை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கைப்பற்றப்பட்ட மணல் கரடியனாறு பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதோடு, சந்தேகநபரும் கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் தொடர்ந்தும் கண்காணிப்பு விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். - (ஜ)

# பரீட்சைகளுக்கு இணையத்தின் ஊடாக விண்ணப்பிப்பதில் ஏதும் பிரச்சினையா?

## மாணவர்களை அறிவிக்குமாறு திணைக்களம் கோரிக்கை

(கொழும்பு)

உயர்தர, சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கு இணையத்தின் ஊடாக விண்ணப்பிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து தமக்கு அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் மாணவர்களைக் கேட்டுக்கொண்டது. அதற்கமைய இந்த விடயம் தொடர்பாக அறிவிப்பதற்கு 1911 என்ற தொலைபேசி இலக்கத்தை பரீட்சைகள் திணைக்களம் அறிமுகம் செய்தது.

அதுதவிர, இந்த விடயம் தொடர்பாக பாடசாலை பரீட்சை ஏற்பாட்டுக் குழுவிற்கும் அறிவிக்க முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித தெரிவித்தார்.

உயர்தர, சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்காக இணையத்தின் ஊடாக விண்ணப்பிப்பதற்கான மென்பொருள் ஒன்றை பரீட்சைகள் திணைக்களம் அண்மையில் அறிமுகப்படுத்தியது.

இதனூடாக உயர்தரப் பரீட்சை வரை விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராணுவச்சிப்பாய் மர்ம மரணம்!

(பிலிமதலாவ)

பிலிமதலாவ போயகம பிரதேசத்தில் எலுகொடை ஓயாவில் இருந்து இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுக் காலை இந்த சடலம் பிரதேசவாசிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இராணுவத்தில் பணியாற்றும் இவர் விடுமுறைக்காக வீடு வந்துள்ள நிலையில் இவ்வாறு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தவுலகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

# 60 எம்.பிக்கள் ஓய்வூதியத்தை இழக்கும் நிலை!

(கொழும்பு)

திட்டமிடப்பட்டுள்ளவாறு எதிர்வரும் மார்ச் மாதம் 02 ஆம் திகதி பாராளுமன்றத்தை கலைத்தால் சுமார் 60 எம்.பி.க்கள் ஓய்வூதிய உரிமைகளை இழக்க நேரிடும்.

ஓய்வூதிய உரிமையைப் பெற பாராளுமனற உறுப்பினர் ஒருவர், பாராளுமன்றத்தில் ஐந்து ஆண்டுகள் காலத்தை நிறைவு செய்ய வேண்டும்.

எனவே மார்ச் 02 ஆம் திகதி ஜனாதிபதி, பாராளுமன்றத்தைக் கலைத்தால் சுமார் 60 எம்.பி.க்கள் வரை ஓய்வூதியத்தை இழக்க நேரிடும் என ஆங்கில இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

அத்துடன் இந்த 60 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை மீட்டெடுக்க அரசாங்கம் எந்தவிதமான நடைமுறைகளையும் பின்பற்றாது எனவும் அதே பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த முறை தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அவர்கள் நிச்சயம் ஓய்வூதியத்தை இழப்பார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1985

கிசோர்




முத்துராஜ்




புவனா




கிரிதரன்




ராகுல்




விஜி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இனவாதப் பிடியிலிருந்து அரசால் மீள முடியாது

## சாய்ந்தமருது நகரசபை விடயத்தில் உறுதியாகியுள்ளது என்கிறார் இம்ரான்

(சாய்ந்தமருது)


**இனவாதப் பிடியில் இருந்து இந்த அரசால் ஒருபோதும் மீள முடியாது என்பது சாய்ந்த மருது நகரசபை விடயத்தில் உறுதியாகியுள்ளது என ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாய்ந்தமருது நகரசபை விடயத்தில் இந்த அரசால் அப்பிரதேச மக்களுக்குப் பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவர்களின் நீண்டகால கோரிக்கையான தனியான நகரசபையை வழங்குவதாக வர்த்தமானி வெளியிட்டபின் அந்த வர்த்தமானியை இரத்துச் செய்வதாக கூறுவது இந்த அரசு இனவாத நிகழ்ச்சிநிரலை தாண்டி செயற்பட முடியாது என்பதுக்கு மிகச்சிறந்த உதாரணமாகும்.

இவ்வாறாக இனவாதிகளின் பிடியிலுள்ள இந்த அரசு கேட்பதை போல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான் மையோ கிடைத்தால் சிறுபான்மையிருக்கு அந்த அரசில் என்ன நடக்கும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

எமது அரசின் காலத்திலும்



நுவரெலியாவில் புதிதாக ஆறு சபைகளை உருவாக்கினோம். அப்பொழுதும் எமக்கு இனவாதிகளிடம் இருந்து அழுத்தங்கள் வந்தன. அதற்காக நாங்கள் அதை இரத்துச் செய்யவில்லை.

அதேபோன்று எமது அரசும் சாய்ந்தமருது விடயத்தில் நூறு வீதம் சரியாக நடந்துகொள்ளவில்லை என்பதே எனது நிலைப்பாடு. சாய்ந்தமருதுக்கு தனியான நகரசபை வழங்கும்போது கல்முனை நகருக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் சிறந்த தீர்வொன்றை பெறவே அன்றைய எமது அரசு முயற்சி செய்து அதற்கான எல்லை பிரிப்பையும் செய்தது. அதை வர்த்தமானியில் அறிவிக்க காலம் தாழ்த்தியமையே எமது அரசு விட்ட தவறு.

இந்த நகரசபை விடயத்தில் கடந்த சில நாட்களாக ஒரு சில ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் கண்டிக்கத்தக்கவை.

இது தொடர்பான உண்மைத்தன்மையை அவர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். எதிர்காலங்களில் இவ்வாறான கருத்துக்களை அவர்கள் வெளியிட மாட்டார்கள் என நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆட்டோக்களுக்கு விதிக்கப்பட்ட 57 தடைகள் அரசால் நீக்கம்

(கொழும்பு)

ஆட்டோக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 57 புதிய தடைகளை நீக்க போக்குவரத்து. அமைச்சு நடவடிக்கை எடுத் தது.

ஏற்கனவே இயற்றப்பட்ட 67 சட்டங்களில் 10 சட்டங்கள் அதே நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

ஆட்டோக்களில் பொருத்தப்பட்டிருந்த அலங்கார பாகங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அவை அகற்றப்பட்டுள்ளன.

எனினும் பயணங்களின் போது ஏனைய சாரதிகளுக்கு மற்றும் பயணிகளின் பாதுகாப்புக்கு இடையூறு ஏற்படக்கூடாது என சாரதிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

அலங்கார தொழிலை பராமரிக்கும் நோக்கில் இந்த சட்டங்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். (இ-7)

# அதியுயர் செயலாற்றுகையை அடைந்த நிறுவனங்களை கௌரவிக்கும் நிகழ்வு

(கொழும்பு)

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (COPA) 2018 நிதியாண்டின் கணனி முகாமைத்துவ தகவல் முறைமையை அடிப்படையாகக் கொண்ட அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் நிதி மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டின் பிரகாரம் அதியுயர் செயலாற்றுகையை அடைந்த நிறுவனங்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் லசந்த அழகியவன்ன மற்றும் உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மூன்று மாநகர சபைகளும், ஐந்து நகரசபைகளும் 33 பிரதேச சபைகளும் அரச அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், மாகாண சபையின் கீழமைத்த திணைக்களங்கள், நிறுவனங்கள், மாவட்டச் செயலகங்கள் போன்றனவும் கௌரவிக்கப்படவுள்ளன.

இதில் 92 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பருத்தித்துறை நகர சபையும், 85 புள்ளிகளைப் பெற்று வலிகாமம் தெற்கு (சுன்னாகம்), வலிகாமம் தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபைகளும் கௌரவத்தைப் பெறவுள்ளன.

இந்நிறுவனங்களை உரிய முறையில் வழிப்படுத்திய வடமாகாண உள்ளூராட்சி அமைச்சும், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களமும் 100 புள்ளிகளைப் பெற்று பாராட்டினைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## டீ.மஞ்சுவின் மனைவி கைது

(கடவத்தை)

கடவத்தை பொலிஸ் கான்ஸ்டபிள் கொலை தொடர்பில் அவருடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் பெண் மற்றும் குறித்த பெண்ணின் மருமகனான திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவரான டீ.மஞ்சுவின் மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கான்ஸ்டபிள் உடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் பெண் முகத்துவாரம் - மட்டக்குளி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

டீ.மஞ்சுவின் மனைவி வத்தளை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கிடையில் பொலிஸாரால் முன்னர் கைது செய்யப்பட்ட பண்டி மற்றும் சுந்தா ஆகியோர் உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களும் மஹர நீதவானிடம் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து அவர்களை தடுத்து வைத்து விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

கடந்த 17 ஆம் திகதி குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடத்தப்பட்ட நிலையில் பன்னல - வேஹஹெர - புலகொட பகுதியிலுள்ள வனப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அத்துடன் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கிரிபத்கொட பகுதியிலிருந்து கடத்துவதற்கு பயன்படுத்திய ஆட்டோவையும் சடலம் மீட்கப்பட்ட பகுதியிலிருந்து பொலிஸார் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய தெற்கு அதிவேக வீதி ஜனாதிபதியால் கையளிப்பு



(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியின் மாத்தறை- அம்பாந்தோட்டை இடையிலான பகுதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட பிரதம விருந்தினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் பகுதி இலங்கையில் இதுவரை அமைக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் சுற்றுச் சூழலுக்கு ஏற்ப உயர்ந்த தரத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிவேக வீதியாகும்.


மாத்தறை-அம்பாந்தோட்டைக்கு இடையில் அமைக்கப்படும் இந்த வீதிக்காக 16 ஆயிரத்து 870 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 | 200 |
| தக்காளி | 140 | 140 | 80 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 | 120 |
| கோவா | 120 | 140 | 90 | 140 |
| கரட் | 300 | 250 | 230 | 280 |
| பூசணி | 100 | 130 | 80 | 140 |
| புடோல் | 100 | 140 | 80 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 240 | 300 | 260 | 320 |
| பாகற்காய் | 140 | 150 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 70 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 70 | 80 |
| பயற்றங்காய் | 160 | 180 | 120 | 200 |
| லீக்ஸ் | 250 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 90 | 120 |
| கறிமிளகாய் | 200 | 160 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 140 | 130 | 90 | 160 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 60 | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 55 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 150 | 140 | 160 |
| வெங்காயப்பூ | 160 | 100 | 90 | 200 |
| முள்ளங்கி | 60 | 40 | 40 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 100 | 100 |




# வெற்றி இரகசியம்



தயங்கித் தயங்கித் தனது பிராக்ரஸ் ரிப்போர்ட்டை அப்பாவிடம் காட்டினான் எட்டாவது படிக்கும் குமார். இதுவரை வகுப்பில் முதல் ராங்க் பெற்று வந்த குமாருக்கு கடந்த இரண்டு தேர்வுகளில் மதிப்பெண்கள் மிகவும் குறைந்து போயிருந்தன.

கடந்த இருமுறைகளும்அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாத குமாரின் தந்தை முத்து வேலுவுக்கு இப்போது சற்று குழப்பமாக இருந்தது.

"குமார், என்னாச்சு கண்ணா முதல் ராங்க் என்னாச்சுது? மார்க்கும் ரொம்பவும் குறைஞ்சு போயிருக்குது. முதல் ராங்க் யாருக்குக் கிடைச்சுது?" பிராக்ரஸ் ரிப்போர்ட்டைப் பார்த்தபடியே கேட்டார்.

"வினோத்துக்கு" கூச்சத்தோடு சொன்னான் குமார்.

"வினோத்தா, அது யாருப்பா?"

வெற்றி இரகசியம் "எங்க கிளாஸ்ல புதுசா சேர்ந்திருக்கிறான். வங்கி மனேஜராக வேலை பார்க்கிற வினோத்தோட அப்பா, நம்ம ஊருக்கு வேலை மாற்றல் ஆகி வந்திருக்கிறார். இரண்டு மாதம் முன்புதான் அவன் எங்க வகுப்பிலே சேர்ந்தான்" என்றான் குமார்.

"நிறைய மதிப்பெண் பெறுகிறவங்க முதல் ராங்க் பெறுவாங்க. சரி, ஆனா உனக்கு முன்னைவிட மதிப்பெண் குறைஞ்சிருக்கே, அது ஏன்?"

"எங்க வகுப்பிலே எனக்குப் போட்டியா வினோத் வந்தபிறகு முன்ன மாதிரி என்னால கவனமா படிக்க முடியலைப்பா. வினோத் இதுவரைக்கும் நகரத்துல பெரிய பள்ளிக்கூடத்துல படிச்சவன். என்னை விட அவனுக்கு நிறைய விஷயங்கள் தெரிஞ்சிருக்குது. மறுபடி வினோத்தோட அப்பா வேற ஊருக்கு மாற்றல் ஆகி, அவன் எங்க பள்ளிக்கூடத்தை விட்டுப் போனாத்தான் என்னால நிறைய மதிப்பெண்கள் பெறமுடியும்னு தோணுது" ஆதங்கத்தோடு குமார் சொன்னதைக் கேட்டதும் அவனது பிரச்சினை என்னவென்று புரிந்தது. தந்தை முத்துவேலுவுக்கு.

"சரி, இப்போ ஒருத்தர் நம்ம வீட்டுக்கு வருவார். அவர் வந்துட்டுப் போனபிறகு உன் பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் கையெழுத்துப் போட்டுத் தர்றேன்." என்றவர், தன் செல்போனை எடுத்து யாரோ ஒருவரிடம் பேசினார்.

அரை மணி நேரத்தில் குமாரின் வீட்டுக்கு வந்த அந்த மனிதரின் கையில் ஏதேதோ பொம்மைகள் மற்றும் சிறிய சிறிய வீட்டு உபயோகப் பொருள்கள் இருந்தன. வீட்டுக்கு வந்த அந்த மனிதர், குமாரின் அப்பாவிடம் தான் கொண்டுவந்த பொருட்களைக் கொடுத்தார்.

"இதோ, இவைதான் நீங்க கேட்ட பொருட்களோட மாதிரிப் பொருட்கள். எவ்வளவு வேணும்னு சொன்னீங்கன்னா, நாளைக்கே உங்க கடையில கொண்டு வந்து போடச் சொல்றேன்" என்றார் அந்த மனிதர்.

"சரி, நாளைக்குக் காலைல கடைக்கு வந்திடுங்க மற்றவை எல்லாம் அங்கே பேசிக்கலாம்" என்ற முத்துவேலு அந்த மனிதரை அனுப்பி வைத்தார்.

அப்பாவிடம் அந்த மனிதர் கொடுத்துவிட்டுப் போன பொருட்களைப் பார்த்த குமாரின் ஆர்வம் அதிகரித்தது. அந்தப் பொருட்களையெல்லாம் கையில் எடுத்துப் பார்த்தான்.

"இதெல்லாம் யாருக்குப்பா?" ஆர்வம் தாங்காமல் கேட்டான்.

"நம்ம கடைக்குத்தான் இனிமேல் நம்ம கடையில பொம்மைகளும் விற்பனை செய்யப் போறேன்பா"

"நம்ம கடையில பேனா, பென்சில், நோட்டுப் புத்தகங்கள் மட்டும்தானே விற்பனை செய்து வந்தீங்க! இனிமேல் பொம்மை எல்லாம் விக்கப் போறீங்களா? ஏம்ப்பா புதுசா இதெல்லாம்?"

"உன்னோட கிளாஸ் வினோத்தை மாதிரி எனக்கும் சிலரால பிரச்சினைகள் வந்திருக்குப்பா. அதுக்காகத்தான் இதெல்லாம்." குறும்பாகச் சிரித்தபடியே சொன்னார் முத்துவேலு.

"என்ன சொல்றீங்கப்பா?" அப்பா சொன்னதன் அர்த்தம் புரியாமல் கேட்டான் குமார்.

"நம்ம கடை பக்கத்துல எத்தனையோ கடைகள் வந்துட்டுது. நாம, நம்ம வியாபாரத்தைத் தக்க வெச்சுக்கணும்னா எல்லாப் பொருட்களும் வாங்கி விக்கணும். நம்ம கடைக்கு வர்றவங்க விரும்புற பொருட்கள் எல்லாமே நம்ம கடையில கிடைக்கிற மாதிரி செஞ்சுக்கணும் இல்லியா? அது சரி இவரை கடைக்கு வரச் சொல்லாம எதுக்காக நம்ம வீட்டுக்கே வரச் சொன்னேன் தெரியுமா?"

"தெரியலை ஏம்ப்பா..?"

"குமார், பத்து வருடங்களுக்கு முன்னால நான் கடை தொடங்கும்போது அந்தப் பகுதியில நம்ம கடை மட்டும்தான் இருந்தது. நம்ம கடையில வியாபாரம் நல்லா நடந்தது. ஆனா, இப்போ நிறையக் கடைகள் வந்துவிட்டன. "எனக்குப் போட்டியா திறந்த கடைகளை மூடிவிட்டால்தான் நம்ம கடையில வியாபாரம் நல்லா நடக்கும்'னு நான் சோர்ந்து போய்ட்டா என்ன ஆகும்? நமக்குத்தான் நட்டம் வரும். நம்ம வியாபாரத்தைத் தக்கவைக்க புதுப் புதுப் பொருட்கள் வாங்கி வச்சாகணும். இப்போ வந்துட்டுப் போனவர் பொம்மைகள், ஃபேன்சி பொருட்களை மொத்த வியாபாரம் செய்கிறார். அவர்கிட்டேதான் நம்ம கடைக்குத் தேவையான பொருட்களை வாங்கப் போகிறேன். அதை நீயும் தெரிஞ்சுக்கிடணும்தான் அவரை நம்ம வீட்டுக்கு வரச் சொன்னேன். நான் எதுக்காக உங்கிட்டே இதைச் சொல்றேன்னு உனக்குப் புரியுதா?" புன்சிரிப்போடு கேட்டார் குமாரின் அப்பா.

"புரியுதுப்பா வினோத் மாதிரி நானும் நல்லாப் படிக்கணும். அவனை மாதிரியே நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்ளணும்னு சொல்றீங்க அதுதானே?" தெளிவு பெற்றவனாகக் கேட்டான் குமார்.

"சரியாப் புரிஞ்சுக்கிட்டே குமார் நம்மோடு போட்டியிட யாருமே இல்லாமல் நாம் பெறுகின்ற வெற்றி, சாதனையே இல்லை. படிப்பு மட்டுமல்ல, விளையாட்டு, தொழில் போன்ற அனைத்திலும் ஆரோக்கியமான போட்டி இருக்கணும். இந்தப் போட்டி மிகுந்த உலகத்தில் ஒவ்வொரு துறையிலும் நமக்குப் போட்டியா யாராவது வந்துக்கிட்டே இருப்பாங்க.

அவங்க தோல்வி அடையணும்னோ அல்லது விலகிப் போயிடணும்னோ நினைக்கிறது ஆரோக்கியமான சிந்தனை இல்லை அவர்களை நாம் தூண்டுகோலாகக் கருதி, நம் திறமையை வளர்த்துக்கிட்டு முன்னேறிச் செல்லணும் அதுதான் ஆரோக்கியமான சிந்தனை" அப்பா, முத்துவேலு சொல்லி முடித்தார்.


"அப்பா, உங்க வெற்றியின் ரகசியத்தைத் தெரிஞ்சுக்கிட்டேன். வினோத் எனக்கு எதிரியில்லை.

நண்பன்தான் என் பதைப் புரிஞ்சுக்கிட்டேன். இனி வினோத்தை நினைச்சு மனம் சோர்ந்து போகமாட்டேன்.

முன்பை விட இன்னும் நல்லாப் படிச்சு அடுத்த தேர்வுகளில் அதிக மார்க் வாங்குவேன்" உறுதியாகச் சொன்ன குமாரிடம்.

"அப்போ, உன்னோட பிராக்ரஸ் ரிப்போர்ட்டையும் பேனாவையும் எடுத்துக்கிட்டு ஓடி வா கையெழுத்துப் போட்டுத் தர்றேன்" மகிழ்ச்சியோடு சொன்னார் முத்துவேலு.

## வழிகாட்டுங்கள்



## விடுகதைகளும் விடைகளும்

- முத்துக் கோட்டைக்குள் மூன்று பேர் புகுந்தார்கள். புகுந்தவர் வரவில்லை. போர் நடக்குது ரத்தம் சொட்டுது.

**வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு**

- ஊசி முனையிலே ஒய்யார சங்கீதம்.

**கிராமபோன்**

- இருண்டதோர் காட்டில், மிரண்டன. பன்றிகள். பத்துப் பேர் பிடிக்க இரண்டுபேர் குத்தினர்.

**பேன்கள்**

- உழைக்க உழைக்க உடம்பிலே தோன்றும்.

**வியர்வை**

- கண்டதுண்டமாய்க் கரியைத் தின்பேன். கண்கள் இல்லாமல் காதம் போவேன். தாகம் எடுக்காமல் தண்ணீர் குடிப்பேன். குரல் இல்லாமல் கூச்சல் போடுவேன்.

**புகைவண்டி**

- ஜாடி மேலே குரங்கு.

**முந்திரிக்கொட்டை**

- இரண்டு கை உண்டு எட்டிப் பிடிக்க முடியாது. நான்கு கால் உண்டு நடந்து செல்ல முடியாது முதுகு உண்டு. ஆனால் முகம் கிடையாது.

**நாற்காலி**

கோபம் என்னும் தீ தன்னையும்
தன்னைச் சேர்ந்தவர்களையும்
அழித்துவிடும் – திருவள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐ.நா சபைக்கே இது என்றால் ஈழத் தமிழர்களுக்கு எப்படி?

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் 43ஆவது கூட்டத்தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகிறது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் கூடும் போதெல்லாம் ஈழத் தமிழ் மக்கள் எங்களுக்கு நீதி கிடைக்குமா? நடந்த கொடுமைக்கு தண்டனை வழங்கப்படுமா? எங்கள் இனத்துக்கு உரிமை வழங்கப்படுமா? என ஜெனிவாவை நோக்கித் தவமிருப்பர்.

இந்தத் தவமிருப்பு இன்று நேற்றல்ல. பத்து ஆண்டுகளாக நீண்டு செல்கிறது.

போர்க்குற்ற விசாரணை பற்றியும் தமிழ் மக்கள் தொடர்பில் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் தொடர்பிலும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் தீர்மானங்களை நிறைவேற்றியதுடன் அதற்கு இலங்கை அரசின் ஒப்புதலையும் பெற்றிருந்தது.

எனினும் ஒவ்வொரு தடவையும் ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பமாகும்போது, மனித உரிமைகள் ஆணையம் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றக் கால அவகாசம் தேவை என்று இலங்கைப் பிரதிநிதிகள் கேட்பதும் அதற்கு ஜெனிவா அனுமதி கொடுப்பதுமே வழமையாயிற்று.

ஆனால் இம்முறை; ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தை தூக்கி எறிந்ததுடன் நீ நிறைவேற்றிய பிரேரணைகள் எவற்றையும் நாம் நிறைவேற்ற முடியாது. அந்தப் பிரேரணையின் உடன்பாட்டில் இருந்து நாம் விலகிக் கொள்கின்றோம் என அறிவித்துள்ளது.

இங்கு முன்னைய அரசு கால அவகாசம் தேவை என்று காலம் கடத்தியதை, இன்றைய அரசு வெளிப்படையாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானங்களை – பிரேரணைகளை நிறைவேற்ற முடியாது என ஒட்டச் சாத்திவிட்டது.

இனி, இலங்கையின் அறிவிப்புத் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என்பதைப் பார்த்திருப்பதுதான் ஒரே வழி.

ஆனால் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் பிரேரணைகளுக்கு இணங்கிவிட்டு, இப்போது அதனை நிறைவேற்ற முடியாது என்று இலங்கை ஆட்சியாளர்கள் கூறுவார்களாயின்,

ஐ.நா அமைப்பை இலங்கை அரசு ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பது உறுதியாகிறது.

இதுதவிர, இலங்கை அரசின் இச்செயல் தொடர்பில் ஐ.நா சபை பேசாதிருக்குமாயின், எதிர்காலத்தில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் எந்தத் தீர்மானத்துக்கும் எந்த நாடும் மதிப்பளிக்காது.

எனவே ஆணையம் நிறைவேற்றிய பிரேரணைகளில் இருந்து இலங்கை அரசு விலகுவதென விடுத்த அறிவிப்பு சர்வதேச சமூகத்தின் முகத்தில் அறைந்தது போன்றது.

தவிர, ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்துக்கே இலங்கை ஆட்சியாளர்கள் இவ்வாறு சவால் விட்டால், ஈழத் தமிழ் மக்களின் விடயத்தில் என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுதலும் கடினமன்று.

# வலம்புரி மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் சைவ மக்கள் மத்தியில் வேதனையைத் தருகிறது

## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை

(யாழ்ப்பாணம்)

வலம்புரி அலுவலகத்தை கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை சுமார் முப்பது பேர் அடங்கிய குழு அச்சுறுத்தியமைக்கு தமது வன்மையான கண்டனத்தை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது

வலம்புரிப் பத்திரிகையின் விமர்சனமும் கண்டனமும் நேர்மையான எழுத்துச் சுதந்திரத்தின் வெளிப்பாடாகும்

அந்த வகையில் நடுநிலை தவறா நன்னெறி காக்கும் வலம்புரி மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் ஊடக சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட சவாலாகும். ஊடக சுதந்திரத்தின் அடிப்படையில் ஜனநாயக ரீதியாக வெளியிடப்பட்ட கருத்திற்கு வன்முறை வழியில் பதிலளிக்க முற்பட்டமை ஏற்புடையதல்ல

வலம்புரி மீது நிகழ்த்தப்பட்ட அடாவடித்தனச் சம்பவமானது சைவ மக்கள் அனைவரது மனங்களிலும் மறையா வேதனையைத் தந்துள்ளது. சைவ சமயம் போல் எல்லா மதங்களையும் அரவணைக்கும் பாங்கினை ஏனைய மதங்களும் பின் பற்றும் போது சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றுள்ளது. (ம)

## நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் பல்வேறு விபத்து சம்பவங்கள்

### மூவர் பலி: 15 பேர் காயம்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளதோடு, குழந்தையொன்று உள்ளிட்ட 15 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வென்னப்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பரவில - வயிக்கால வீதியில் தம்பரவில தேவாலயத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த தேவாலயம் அமைந்துள்ள திசையிலிருந்து வயிக்கால நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் முன்னால் சென்ற லொறியை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்த்திசையில் வந்த சிறியரக (டிப்பர்) வாகனமொன்றுடன் மோதியதாலேயே விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடக ப்பிரிவு தெரிவித்தது.

கட்டுநாயக்க - எவரிவத்த, யாகொடமுல்ல பிரதான வீதியில் ஹீனடியன பிரதேசத்தில் எவரிவத்த நோக்கி சென்று கொண்டிருந்த கெப் வாகனம் வீதியை விட்டு விலகி மின்கம்பம் ஒன்றில் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதோடு 13 பேர் காயமடைந்துள்ளனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் காத்தான்குடியிலிருந்து புனச்சி முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி பாதையில் சென்ற பெண்ணொருவர் மீது விபத்து இடம்பெற்றுள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** சாம்பல்தோட்டம், வவுனியா நகரத்திலிருந்து (கண்டி வீதி) பூ-ஓயா வரை, மதவுவைத்தகுளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரை, Gowloom Garments, ஈரப்பெரிய குளம், யோசப் படை முகாம, மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், Air Point Joint Service Army Camp, BOO ஓயா, Recbo North, இலுப்பைக்குளம், வவுனியாவிலிருந்து (மன்னார் வீதி) நெளுக்குளம் ஊடாக இராஜேந்திரகுளம் வரை, பட்டாணிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, வவுனியா தொழில் நுட்பக்கல்லூரி, பம்பைமடு பலகலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், omega line, சுயன் அரிசி ஆலை, அஷவி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, லீலா ஆலை, குருமன்காடு UNHCR, பூந்தோட்டம், மகாறம்பைக் குளம், வைரவ புளியங்குளம, ஆதிவிநாயகர் கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**தற்பெருமையடிப்பதை எப்போது விட்டு விடுகிறீர்களோ அன்றிலிருந்து உங்களுடைய கௌரவம் வளர ஆரம்பிக்கிறது. -எட்வர்டு**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## எந்த நேரத்திலும் தியானம் செய்யலாம்?




"தீட்டா அலை"யிலும், "ஆல்பா அலை"யிலும் விழிப்பு நிலையிலேயே இருக்கப் பழகிக் கொண்டோமானால், மற்றவர்களுடைய எண்ண அலைகள் தீமை விளைவிப்பனவாக இருந்தாலும், உணர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பவையாக இருந்தாலும், அவை நம்மைப் பாதிக்கா. உதாரணமாக நான்கு வானொலி நிலையங்கள் நான்கு விதமான வேறு பட்ட நிகழ்ச்சிகளை ஒரே நேரத்தில் ஒலிபரப்புகின்றன. நம் ரேடியோவை எந்த அலை நீளத்தில் வைக்கிறோமோ அது மாத்திரம் தான் இங்கே கேட்கும். மற்றவை எல்லாம் வந்து மோதும் ஆனால் கேட்காது. அது போலவே, தேவையற்ற அலைக் கழிப்பும் பாதிப்பும் இல்லாமல் விட்டு விலகி எந்த நிலையில் இருக்கிறோமோ அந்த நிலைக்கு ஏற்ப நமக்கு என்ன தேவையோ அது கிடைக்கும். நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை நினைப்போம். நாம் என்ன நினைக்கிறோமோ அதைச் செய்ய முடியும் என்ற அளவிலே மனிதத்திறமை வெளிப்படுகிறது. இந்த மனிதத் திறமை அதிகரிக்க அதிகரிக்க என்ன ஆகும்? நாம் எங்கு போனாலும், நமக்காக மற்றவர் தாமாகவே அந்த அலையிலேயே கட்டுப்பட்டு, நம் மதிப்பை உணர்ந்து புரிந்து கொள்ள அவர்களுக்கு எண்ணம் தே?ன்றும். எங்கே போனாலும் நமக்கு வெற்றியாகவே இருக்கும்.

அப்படி எங்கேயாவது வெற்றி இல்லாமல் தடை ஏற்பட்டாலும், அந்தத் தடையினால் நமக்குக் கெடுதல் இல்லை. "நம்மைத் திருப்பி விடுவதற்காக இந்த அலை நீளத்தில் தேவையில்லாதவற்றைத் தள்ளி விடுகிறது. அதனால் அந்த வேலை நடக்கவில்லை" என்று எண்ணி அமைதி அடைந்தால், எந்தக் காலத்தில் எந்தச் சூழ்நிலையில் அந்த வேலை நடக்க வேண்டுமோ அது தானாகவே நடந்துவிடும்.

"படிக்கும்போது தவம் செய்யலாமா, இரவில் செய்யலாமா?" என்றெல்லாம் கேட்பார்கள். தவத்திற்குக் காலமும் வேண்டியதில்லை. திசையும் வேண்டியதில்லை. அறிவை, விரிவான பிரபஞ்ச இணைப்போடு இணைக்கக்கூடிய ஒரு பயிற்சிதான் தவம். அதற்குக் கால நேரம் பார்க்க வேண்டியதில்லை. எந்தக் காலத்திலேயும் செய்யலாம். இதையெல்லாம் உணர்ந்து, நீங்கள் எவ்வளவு தூரம் ஆழ்ந்து தவம் செய்து வருகிறீர்களோ, அந்த அளவுக்கு, விவகாரங்களில் ஏற்படக்கூடிய சிக்கல்களை அறுத்துக் கொள்ளவும், தெளிந்த நிலையிலே அந்தச் சிக்கல்களை தீர்த்துக் கொள்ளவும், சிக்கல் வராமல் காத்துக் கொள்ளவும் வேண்டிய விழிப்பு நிலையை இந்தத் தவம் உங்களுக்குக் கொடுக்கும்.

# பொன் அணிகள் போர் மாபெரும் கிரிக்கெட் போட்டி



சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான பொன் அணிகள் போர் என்ற மாபெரும் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 28, 29 வெள்ளி, சனி ஆகிய இருதினங்களில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் 1917 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட கிரிக்கெட் போட்டி போர்க் காலங்களைத் தவிர ஏனைய காலங்களில் ஒழுங்காக நடைபெற்று வந்தவேளை 2014 ஆம் ஆண்டு போட்டியின் போது இடம்பெற்ற அசம்பாவிதம் காரணமாக 2014ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரை போட்டிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களை கொண்ட போட்டி மட்டும் நடைபெற்றது.

இவ்வருடம் 103 ஆவது வருட இருநாள் போட்டியும் 28 ஆவது தடவையாக ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்திற்கான 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களை கொண்ட கிரிக்கெட் போட்டி 07 மார்ச் 2020 இலும் யாழ். மாவட்டத்திலே முதன்முறையாக இருபது இருபது கிரிக்கெட் போட்டி 9 மார்ச் 2020 இலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்பணி ஏ.பி. திருமகன், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வைத்தியர்.டி.எஸ். சொலமன் மற்றும் கல்லூரி பழைய மாணவர்கள், ஆசிரியர்களின் பெரும் முயற்சியினால் மீண்டும் சகல போட்டிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் நடைபெற்ற போட்டிகளில் இரு நாள் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 32 தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி 16 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன.

32 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. ஒரு போட்டி இரத்துச் செய்யப்பட்டது. மிகுதிப் போட்டிகளின் விபரம் கிடைக்கப் பெறவில்லை. ஒருநாள் போட்டியில் (மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள்) 20 தடவைகள் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் 6 தடவைகள் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. ஒருபோட்டி இடை நிறுத்தப்பட்டது.



இவ்வருடம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு செல்வன் பிலிப் ஜவன் றொசாந்தனும் யாழ்ப்பாண கல்லூரி அணிக்கு செல்வன் எம்.சிந்துஜனும் தலைமை தாங்கவுள்ளனர். (ஜ)

## வீரர்களின் போர்- 2020

யா/மகாஜனக் கல்லூரிக்கும் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும்இடையே வருடாவருடம் நடைபெறும் மாபெரும் துடுப்பாட்ட போட்டியான "வீரர்களின் போர்" 2020 இவ்வருடம் மகாஜனா மைதானத்தில் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ்வருடம் நடைபெறவிருப்பது 20 ஆவது போட்டியாகும். இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்கள் அணிகள் மோதும் "நண்பர்களின் போர்" துடுப்பாட்டம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இருபது-20 போட்டியாக நடைபெறவுள்ளது. (ஜ-105)

## தங்கப் பதக்கங்கள் வென்ற வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

(கரணவாய்)

சர்வதேச ரீதியில் கிக் பொக்ஷிங் போட்டியில் பல தங்கப் பதக்கங்களை வென்று வெற்றிவாகை சூடி வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்த வவுனியா வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் வவுனியா வாடிவீடு மண்டபத்தில் விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர் செ. சபாநாதன் தலைமையில் இடம்பெறும். இதில் வீரர்கள் வவுனியா கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து அழைத்துச் செல்லப்படுவர். (ஜ-5-60)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


## மகளிர் இருபது-20 உலகக்கிண்ணத் தொடர்; நியூசிலாந்து அணி 7விக்கெட்டுக்களால் வெற்றி



அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் 2020 ஆம் ஆண்டின் மகளிர் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியுடனான போட்டியில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.


2020 ஆம் ஆணடுக்கான மகளிர் இருபதுக்கு- 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் இல்ங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையே பேர்த்தில் ஆரம்பமானது. போட்டியில் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியானது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களை குவித்தது.

இலங்கை அணி சார்பில் அணித் தலைவி சாமரி அத்தபத்து 41 ஓட்டங்களையும், ஹர்ஷிதா மாதவி 27 ஓட்டங்களையும், ஹசினி பெரேரா 20 ஓட்டங்களையும், அனுஷ்கா சஞ்சீவானி 15 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற ஏனைய வீராங்கனைகள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.128 ஓட்டம் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து கிரிக்கெட் அணியானது 17.4 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களை குவித்து வெற்றியை உறுதி செய்தது.

நியூசிலாந்து அணி சார்பில் அணித் தலைவி சோபிடெவின் 75 ஓட்டங்களையும், ரேச்சல் பூசாரி 6 ஓட்டங்களையும், சுசி பேட்ஸ் 13 ஓட்டங்களையும் மேடி கிரீன் 29 ஓட்டங்களையும், கேட்டி மார்ட்டின் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

இன்று பேர்த்தில் ஆரம்பமாகவுள்ள 5 ஆவது போட்டியில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியானது அவுஸ்திரேலிய அணியை எதிர் கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ஆசிய மல்யுத்த சம்பியன்ஷிப்; இந்திய வீரர் தாஹியா தங்கம்



டில்லியில் இடம்பெற்ற ஆசிய மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் ரவி தாஹியா 10-0 என்ற கணக்கில் வென்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

ஆசிய மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டி டில்லியில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஆடவர் 57 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் ரவி தாஹியா மற்றும் தஜிகிஸ்தானின் ஹிக்மடுல்லோ மோதினர். இதில் ரவி தாஹியா 10-0 என்ற கணக்கில் வென்றார். இதன் மூலம் தாஹியா தங்கப்பதக்கம் வென்றார். இதேபோல், நேற்று முன்தினம் நடந்த ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் மல்யுத்த வீரர் பஜ்ரங் பூனியா மற்றும் ஜப்பானின் டகுடோ ஒட்டாகுரோ விளையாடினர்.

இந்தப் போட்டியில் கடுமையாக போராடிய பூனியா, ஒட்டாகுரோவிடம் தோற்றுப் போனார். இதனால் பூனியாவுக்கு வெள்ளி பதக்கம்கிடைத்தது. கடந்த 21 ஆம் திகதி நடந்த பெண்கள் பந்தயத்தின் 65 கிலோ எடைப்பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சாக்ஷி மாலிக் வெள்ளி பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## வெளிநாடு...

வித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடு களை விமர்சித்து, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிஷேல் பெச்லெட் அறிக்கை வெளியிட்டுள்ளமை குறித்து ஊடகவியலா ளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக் கையில்,

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாள ரின் அறிக்கையில் கடந்த அரசாங்கம் குறித்தே குறிப்பிடப்பட்டுள்ளது. எமது அர சாங்கம் அமைக்கப்பட்டு இரண்டு மாதங் கள் மாத்திரமே. அந்த அறிக்கையில் விமர் சனம் முன்வைக்கப்பட்டிருக்குமானால் அது கடந்த அரசாங்கத்திற்கே பொருந்தும். எதனையும் செய்வதற்கு எமது அரசாங்கத் திற்கு காலம் இருக்க்வில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நாம் தெளிவாக ஒன்றைக் கூறுகின்றோம். இந்த நாட்டின் உள்விவகார விடயங்களை, சர்வதேச நிறுவனத்திற்கு நாம் பொறுப்பளிக்க தயாராக இல்லை. அவர்களின் மேற்பார்வையில் இந்த நாட்டை கீழ்ப்படிய வைக்க நாம் தயாராக இல்லை.

நாம் ஐ.நா தீர்மானத்தை நிராகரிப் பதால், சர்வதேசத்துடன் பணியாற்றும் விட யத்தில் பாதிப்பு ஏற்படாது. தேசிய பொறி முறை ஒன்றை ஏற்படுத்துவதே எமது எதிர் பார்ப்பு. அதற்கு தேவையான பலம் எமது நாட்டிற்கு இருக்கின்றது. அவசியமான அனு பவமும் இருக்கின்றது.

ஆகவே அனைத்தையும் வெளிநாட்ட வர்களுக்கு, வெளிநாட்டு நீதிபதிகளுக்கு, வெளிநாட்டு அதிகாரிகளுக்கு கையளிக்க வேண்டிய தேவை இல்லை. அவ்வாறான எந்தவொரு விடயங்களுக்கும் இணங்கப் போவதும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## குற்றப்புலனாய்வு...

இதன்தலைமைத்துவத்தை தேசிய புலனாய்வு சேவையின் பிரதானி மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் வகிக்கிறார்.

இந்த செயற்பாட்டு பணிக்குழுவின் ஊடாக குறித்த விசாரணைகளின் முன் னேற்றம் தொடர்பிலான அறிக்கையை பாது காப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவிற்கு வாராந்தம் வழங்க வேண் டும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித் துள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் மேற் கொள்ளப்படும் விசாரணைகளை துரிதப் படுத்துவதை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய ஆலோச னைக்கு அமையவே இந்த செயற்பாட்டு பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. (ம)

## கூட்டமைப்பை...

தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான மாவை சேனாதிராசா தெரிவித்துள் ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத் தப்பட்ட ஊடக சந்திப்பின்போது கட்சியைப் பதிவு செய்ய வேண்டுமென்ற கோரிக் கையை முன்வைத்து மேற்கொள்ளப்படு கின்ற போராட்டம் தொடர்பாக ஊடகவிய லாளர் ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது இந்த ஊடக சந்திப்பை வேறு நோக்கத்திற்காக நடத்துகின்றோம் என சம்பந்தன் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இந்தக் கேள் வியை விடுத்து வேறு கேள்வியைக் கேளுங் கள் அதைப் பற்றிப் பேசுவோம் என சுமந் திரன் தெரிவித்தார்.

ஆனாலும் இதன்போது கருத்து வெளி யிட்ட மாவை சேனாதிராசா, அதற்கான அவசியம் தற்போது ஏற்படவில்லை என்றும் பங்காளிக் கட்சிகளோடு சேர்ந்து அவர்களு டன் பேசித்தான் இந்த இயக்கத்தை நடத்து கின்றோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை தேர்தலொன்று நெருங்கி வருகின்ற நேரத்தில் தமிழ்க் கட்சிகளி டையே ஏற்படும் பிளவுகள் மற்றும் புதிய கூட்டணிகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக் கும் பதிலளிக்க மறுத்து விட்டனர்.

குறிப்பாக தேர்தல் சம்பந்தமான கேள்வி கள் வேண்டாம். தேர்தல் இன்னும் அறி விக்கவில்லை. அதனை அந்த நேரத்தில் பார்த்துக் கொள்வோம் என பேச்சாளர் சுமந் திரன் கூறி ஊடக சந்திப்பை முடித்துக் கொண்டார். (ம)

## விபத்துக்குள்...

ளார்.

இச்சம்பவமானது கடந்த 21ஆம் திகதி யாழ்.நீர்வேலி சந்தைப் பகுதியில் இடம்பெற் றுள்ளது.

இதில் புத்தூர் வடக்குப் பகுதியைச் சேர்ந்த கந்தையா கணேசலிங்கம் (வயது-61) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## வலிந்து காணா...

நடராஜா, மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அமலநாயகி ஆகியோரும் ஜெனிவா செல்லவுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் ஜெனிவா செல் லும் இவர்கள், வலிந்து காணாமலாக்கப் பட்ட உறவுகளுக்கான பொறுப்புக்கூறலை இலங்கை அரசாங்கம் செய்வதற்கு சர்வ தேச நாடுகள் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து ஐ.நா. அரங்கினுள் கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர். (ம)

## எடுக்கப்பட்ட தீர்...

வலியுறுத்த வேண்டும் என தமிழரசு கட்சி மத்திய குழு கூட்டத்தில் ஏகமனதாக தீர் மானம் நேற்று எடுக்கப்பட்டுள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரி வித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அரசு ஐ.நா தீர்மானங்களிலிருந்து வெளி யேறுவது தொடர்பில் அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 26ம் திகதி இலங்கைக்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த ஒதுக்கப்பட்ட நேரத்தில் இலங்கை அரசின் சார்பில் செல்லும் தினேஷ் குண வர்த்தன குறித்த தீர்மானங்களிலிருந்து விலகுவதாக அறிவிக்க உள்ளார்.

இலங்கை குறித்த தீர்மானங்களிலிருந்து விலகும் என்பது ஏற்கெனவே அறிந்த ஒன் றாகும். ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவர் களின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் அவ தானித்து வருகின்றோம்.

இந்த நிலையில் மனித உரிமைகள் பேரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களி லிருந்து இலங்கை வெளியேறும் நிலையில் எவ்வாறான விடயங்களை முன்வைப்பது என்பது தொடர்பில் மத்திய குழு கூட்டத்தில் முடிவினை ஏகமனதாக எடுத்திருந்தோம்.

ஐ.நா மனித உரிமை பேரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை இலங்கை அரசு மீறுகின்றமையை தமிழரசு கட்சி வன்மையாக கண்டிக்கின்றது. அதே வேளை இலங்கை குறித்த தீர்மானங்களி லிருந்து விலகினாலும், மனித உரிமைகள் பேரவையினால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்த வேண்டும் எனவும், அது தவிர்ந்து வேறு வழிகளையும் கையாள வேண்டும் எனவும் கோருவதான தீர்மானத்தினை நாம் எடுத்துள்ளோம்.

தமிழரசுக் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர் மானமாக மாத்திரமல்லாது, பங்காளி கட்சி களிடமும் குறித்த தீர்மானத்தை தெரியப் படுத்தியதாகவும், அவர்களும் அதனை ஏற் றுள்ளதாகவும் சுமந்திரன் இதன்போது தெரி வித்தார்.

இதேவேளை பாராளுமன்றம் கலைக் கப்படாத நிலையில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆரம்பகட்ட தீர்மானங்கள் சிலவற்றை நாங்கள் எடுத்துள் ளோம்.

அந்த வகையில் சில இணக்கப்பாடு கள் எடுக்கப்பட்டுள் ளன. எடுக்கப்பட்ட முடிவுகள் முழுமை யானது அல்ல. இது தொடர்பில் தொடர்ந்தும் அவ்தானம் செலுத் தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் இரா.சம்பந்தன் போட்டியிடுவாரா அல்லது தேசியப்பட்டியல் ஊடாக பிரதிநிதித்துவம் செய்யப்படுவாரா என வினவியபோது,

இன்றைய நிலை வரைக்கும் அவர் தேர் தலில் போட்டியிடுகின்ற சூழலே காணப் படுகின்றது எனத் தெரிவித்தார்.

இத்தேர்தலில் பெண்கள், புது முகங் களிற்கு அதிகம் முன்னுரிமை வழங்கப் படுமா என அவரிடம் வினவியபோது,

இம்முறை தேர்தலில் படித்த இளம் முகங்களிற்கான சந்தர்ப்பங்களை வழங்கு வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட் டுள்ளதாகவும், எனினும் தீர்மானம் முழுமையாக எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்த அவர் இவ்விடயம் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பெண் உறுப்பினர்களை மாவட்டம் தோறும் ஒருவரையாகிலும் வெற்றி பெற வைக்க வேண்டும் என்பது கடந்த தேர்தல்களிலும் நாம் எடுத்த முயற்சி யாகும். இம்முறையும் அவ்வாறான நிலையே காணப்படுவதாகவும் அவர் தெரி வித்தார். (ம-100)

## ஓமந்தையில் பஸ்...

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.30 மணியள வில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட் டது.

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு பயணித்த பேருந்தே விபத்துக்குள்ளாகியது. அதில் பயணித்த 4 பேர் பலியானதுடன், 20 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் 4 அம்புலன்ஸ்களில் வவு னியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் சாரதியின் இருக் கைக்கு அருகில் தீப் பிடித்ததாக அங்குள்ள வர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் தீ வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதன்போது பேருந்தும் விபத்துக்குள் ளான சொகுசுக் காரும் தீயில் எரிந்துள்ளன.

வாகனங்களின் தீ தீயணைப்பு படையி னரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட் டுள்ள நிலையில் ஓமந்தை பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் விபரங் கள் மற்றும் விபத்துத் தொடர்பான மேலதிக தகவல்களை இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பெறமுடியவில்லை. (ம-250)

## மாகாண சபை...

பான்மை அதிகாரத்தை பெற்றுக்கொண்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறை வேற்ற நடவடிக்கை எடுப்போம் என நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன் பொதுத் தேர்தல் முடிந்து இரண்டு மாதங்களில் மாகாணசபை தேர் தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத் திருக்கின்றது.

அதனால் நீதி அமைச்சர் என்றவகை யில் மாகாண சபைகளை விரைவில் செயற் படுத்துவதற்காக தேர்தலை நடத்த அடுத்த வாரம் அமைச்சரவைக்கு சட்டமூலம் ஒன்றை சமர்ப்பிக்க இருக்கின்றேன்.

மாகாண சபைகள் செயற்படாமல் இருப்ப தால் மக்கள் தங்களின் தேவைகளை நிறை வேற்றிக் கொள்ள முடியாமல் உள்ளதாகவும் அவர் கூறினார். (ம)


நீரோகா
திகதி 2020/02/23
சீட்டிழுப்பு இலக்கம் 0666
லக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 14 15 32 34

மஹஜன சம்பத
திகதி 2020/02/23
சீட்டிழுப்பு இலக்கம் 4120
N 7 3 8 9 2 4

தன நிதானய
திகதி - 2020.02.23
சீட்டிழுப்பு இலக்கம் - 269
R 07 13 22 46

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23/02/2020
சீட்டிழுப்பு இலக்கம் 2401
T 35 41 53 57

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 892
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.02.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,304,105/-
வெற்றி இலக்கங்கள் 10 28 30 71 Z

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.02.2020
வெற்றி வாரம் 2778
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் கடகம் 14 15 40 51
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,690,026

டபள் சான்ஸ்
ரூ.500 பரிசுக்குரிய 3044
ரூ.100 பரிசுக்குரிய 873
விசேட இல.
2020.02.24 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

சீட்டிழுப்பு வாரம் 563
23.02 2020
V 01 09 30 34
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,995,320
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1132
சீட்டிழுப்பு திகதி 23.02.2020 ஞாயிறு
I 05 14 23 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.97,245,464
7 7 2 5

சித்தார்த்தன், கஜதீபன், ஐங்கரநேசன்

## வலம்புரி மீதான அச்சுறுத்தலுக்கு வன்மையான கண்டனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலம்புரி மீதான அச்சுறுத்தலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன் வட மாகாணசபை முன்னாள் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் ஆகியோர் தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

வலம்புரிக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட சித்தார்த்தன் எம்.பி. மற்றும் கஜதீபன் வலம்புரி மீதான அச்சுறுத்தல் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் தமது கண்டனத்தையும் தெரிவித்தனர்.

மேலும் வட மாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் வலம்புரிக்கு நேரில் வந்து நிலைமைகளை கேட்டறிந்ததுடன் தனது கண்டனத்தையும் தெரிவித்தார்.

வலம்புரி மீதான மதவாத அச்சுறுத்தலை கேள்வியுற்ற பல பிரதேசசபை உறுப்பினர்கள் பொது மக்கள் மற்றும் பல பொது அமைப்புக்கள் வலம்புரிக்கு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர். (ம)

## வாள், கத்தி, பொல்லுகளுடன் வந்த இனந்தெரியாத நபர்களால்

### வீட்டின் ஜன்னல், வெளிக்கேற் அடித்து சேதமாக்கப்பட்டது

(கொடிகாமம்)

வாள், கத்தி, பொல்லுகளுடன் வீடு புகுந்த இனந்தெரியாத நான்கு நபர்கள், வீட்டிலிருந்தவர்கள் கதவை பூட்டிவிட்டு வீட்டிற்குள் இருந்ததால் வெளிக்கேற்று வீட்டு ஜன்னல் என்பவற்றை கொத்தி சேதப்படுத்திய பின்னர் ஓடி மறைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் கச்சாய் வீதி றோட்டில் அமைந்துள்ள ஆத்தியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் கறுப்பு துணியால் முகத்தை மூடிக்கொண்டு வந்த நபர்கள் வீட்டிலிருந்தவர்களை தாக்குவதற்காக சென்ற போது வீட்டுக் கதவை திறக்காமல் இருந்ததால் வீட்டுக்காரர்கள் மேல் தாக்குதல் இடம் பெறவில்லை

உடமைகள் அடித்து உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவ்விடத்திற்கு சென்ற கொடிகாமம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-114)

நாங்கள் தோற்கடிக்கவில்லை

## கணக்கறிக்கையை அரசே வாபஸ் பெற்றுக்கொண்டது

### ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ளும் அரசாங்கத்தின் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தோம். என்றாலும் அரசாங்கம் கணக்கறிக்கையை சமர்ப்பிக்காமல் வாபஸ் பெற்றுக் கொண்டது.

மாறாக நாங்கள் தோற்கடிக்கவில்லை என ஐக்கிய தேசிய கட்சி கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அரசாங்கத்தின் கடன் செலுத்துவதற்கும் மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க இருந்த இடைக்கால கணக்கறிக்கைக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்க மறுத்ததாக அரசாங்கத்தின் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் பனிப்போர் இடம்பெற்று வருகின்றது.

அதனை மறைப்பதற்கே எங்களை குறைகூறி வருவதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ம)

## 20 வருட வீரவங்ச விழாவில் ஜனாதிபதி கோட்டா பங்கேற்பு

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவங்சவின் பாராளுமன்ற வாழ்வின் 20 வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் இடம்பெற்ற விழாவில் பிரதம அதிதிகளாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டனர்.

"20 வருட வீரவங்ச" எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர் விமல் வீரவங்சவின் அரசியல் வாழ்க்கை பற்றி இசுறு பிரசங்க அவர்களினால் எழுதப்பட்ட "விமல் யுககாரகத்வயே பூமிகாவ" (விமல் - யுகங்களின் பங்கு) எனும் நூல் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

நாட்டை தீவிரவாதத்திலிருந்து மீட்டெடுத்தல், அபிவிருத்தி பாதைக்கு இட்டுச் செல்லல் மற்றும் நாட்டின் கௌரவத்திற்காக முன்னிற்றல் போன்ற விடயங்களில் தான் மற்றும் வீரவங்ச முகங்கொடுத்த சவால்கள், பிரச்சினைகள் பற்றி பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் முன்னிலையில் நினைவு கூர்ந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ பெரும்பான்மை விருப்பத்தின் பேரில் ஜனாதிபதியாக பதவி ஏற்கும் வரையிலான செயற் பாட்டில் தடைகளை வெற்றி கொண்டு கடந்துவந்த பாதையில் ஒரு பல மான சக்தியாக விமல் வீரவங்ச இருந்தார் என பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு தனது நன்றியை தெரிவித்த அமைச்சர் விமல் வீரவங்ச, நாடு அரசை இழக்கும் ஆபத்திற்குள்ளான சந்தர்ப்பத்திலேயே கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டின் தலைவராக்க முடிந்ததாக குறிப்பிட்டார்.

களனி பல்கலைக்கழகத்தின் கலாசார பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் சங்கைக்குரிய இதுராகாரே தம்மரத்தன தேரர், மற்றும் தொல்பொருள் பட்ட பின்படிப்பு கல்வி நிலையத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோம தேவ ஆகியோர் விசேட உரையாற்றினர்.

அமைச்சர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

## அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் மணல் ஏற்றிய 9 பேர் கைது

(திருகோணமலை)

அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் மணல் ஏற்றிய ஒன்பது நபர்கள் கடற்படையால் கைது செய்யப்பட்டனர். மேலும் திருகோணமலை செம்பல்தெட்டி பகுதியில் கிழக்கு கடற்படை கட்டளைக்கு இணைக்கப்பட்ட கடற்படையினர் மற்றொரு சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அங்கு ஒன்பது சந்தேக நபர்கள் அனுமதி இல்லாமல் மணல் ஏற்றும்போது கடற்படையால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கின்னியா பகுதியில் வசிக்கின்றவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

## மதுப் போத்தல்களுடன் ஒருவர் கைது

(ஹம்பகா)

கிரிந்திவெள - போமலுவ , நிதன்கும்புர பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரிடமிருந்து 3, 37, 500 மில்லி லீற்றர் (450 போத்தல்கள்) மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 36 வயதுடைய பல்லேகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. கிரிந்திவெள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550*/= Kg
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8785)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(2362)

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576

அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-9311)


றோமானியா வேலைவாய்ப்பு!
மேசன் &
கனரக வாகன சாரதிகள்
2009ஆம் ஆண்டுக்கு முந்திய சாரதி அனுமதி பத்திரம் அவசியம்
உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்
சம்பளம் US $ 590 - 700
106,790 - 126,700
விசா - டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!
மூன்று அணிகள் பயணமாகின!
அடுத்த அணியில் நீங்களும் இணைய
077 00 38 215, 077 55 46 956, 021 221 9 221
எமரல்ட் ஐல்
License No. 2268
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-9319)

இரண்டு வார அதிதுரித பயிற்சியுடன்
வெளிநாட்டு
ஹொட்டேல் வேலைவாய்ப்பு

பயிற்சி, முன்னனுபவம் உள்ளவர்கள்
உடனடியாக இணையலாம்!
விசேட கருத்தரங்கும் அனுமதிகளும்
பெப். 27 வியாழன் காலை 10மணி
பதிவுகளுக்கு 0773616798
No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
021 2219 221
SIKARAM ACADEMY
221-1/1, மின்சார நிலைய வீதி
(2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்.
(C-9320)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-9311)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.